தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி

சென்னை 600 113




31வது ஆண்டு மலர்

INTRODUCING




To give you the highest possible quality at each stage of your production, Kodak has designed a film *'system'* with the ability to faithfully carry your vision from origination through post-production to release. It's called the **EASTMAN EXR Film System** and includes:

**EASTMAN EXR Negative Films for origination**

**EASTMAN EXR Intermediate Films for post-production**

**EASTMAN EXR Print Films for release**

The EASTMAN EXR Film System gives you certainty in an uncertain business. Ask for it at every stage of your production.

THE 'EASTMAN EXR' FILM SYSTEM FROM KODAK

# முப்பத்தொன்றாவது ஆண்டு மலர்

**(1994 - 1995)**

**தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி**
அடையாறு, சென்னை – 600 113.

# ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | மாணவர் பேரவைக்காக |
| | : | எஸ். ஜனகராஜ் (மூன்றாமாண்டு படப்பதனிடல்) |
| | : | ரவி பெர்னாட் (மூன்றாமாண்டு இயக்கம்) |
| | : | ஜான் (மூன்றாமாண்டு படத்தொகுப்பு) |
| கௌரவ ஆசிரியர் | : | திரு. மதன் கேப்ரியேல் (நடிப்புத்துறைத் தலைவர்) |
| ஆசிரியர் | : | கி. ஜெகந்நாதன் (மூன்றாமாண்டு படத்தொகுப்பு) |
| உதவி ஆசிரியர்கள் | : | சோம. சுந்தரவடிவேலு (முதலாமாண்டு படத்தொகுப்பு) |
| | : | ஜவஹர்லால் நேரு (இரண்டாமாண்டு இயக்கம்) |
| விளம்பர நிர்வாகம் | : | பாபு தூயவன் (இரண்டாமாண்டு இயக்கம்) |
| | : | ராஜ்மோகன் (முதலாண்டு இயக்கம்) |
| | : | கார்த்திகேயன் (முதலாண்டு ஒலிப்பதிவு) |
| | : | அசோக் ஜாய் (முதலாண்டு ஒலிப்பதிவு) |
| நிழற் படங்கள் | : | R. ஜெயகுமார் (மூன்றாமாண்டு ஒளிப்பதிவு) |
| முன் அட்டை | : | கி. கோவிந்தராஜ் B.Sc., |
| வடிவமைப்பில் சிறப்பு உதவி | : | S. பியுலா ஷீலா B.Sc., (Vis. com) |
| அச்சிட்டோர் | : | Emarald Printers, Madras. |



# சமர்ப்பணம்

கலை உலகில் நூற்றாண்டு கண்ட திரைப்படக்கலையின் வளர்ச்சிக்கு, தங்கள் பாதங்களை முள்ளுக்கிரையாக்கி நாங்கள் நடக்க மலர்ப்பாதை அமைத்துக் கொடுத்த எங்கள் முன்னோர்களான திரைப்படக் கலைஞர்களுக்கு இம்மலர் சமர்ப்பணம்.

# கல்லூரி முதல்வர் உரை



'திரைக்கலை வளர்ச்சிக்கு முறையான பயிற்சி நிறுவனங்கள் தேவை என்று டி. டபுள்யூ கிரிஃபித் அன்று கூறியதை நன்குணர்ந்தே தமிழ்நாடு அரசு 1946ஆம் ஆண்டே திரைப்பட ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு பயிற்சிகளைத் துவக்கியதோடல்லாமல், தொடர்ந்து, பல்வேறு துறைகளையும் உருவாக்கி, ஏராளமான பணத்தைச் செலவிட்டு, தலைசிசறந்த திரைப்படக் கல்வி நிறுவனம் என்று கூறத்தக்க அளவிற்கு வளர்ந்துள்ளது. திரைப்படமும் தொலைக்காட்சியும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கும் இந்நாளில் இவ்விரு தொழில் நுணுக்கங்களையும் கற்றுத் தரும் இக்கல்லூரிக்கு பல நாடுகளிலிருந்தும் வந்துபடிக்கத் துடித்து எழுதப்பட்ட கடிதங்கள் வந்த வண்ணமுள்ளது. இந்த கால கட்டத்தில் இக்கல்லூரியில் படிக்க வாய்ப்புப் பெற்ற மாணவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள். கிடைத்த இந்த நல்லவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? இக்கல்லூரியில் இருக்கும் அனைத்து வசதிகளையும் நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறோமா என்பதைச் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

இன்று நம் கல்லூரி வளாகமே பச்சை பசேலென பூத்துக் குலுங்கிபுதுப் பொலிவோடு காண்பவர்களைக் கவர்ந்திருக்கும் வகையில் ஜெ.ஜெ. திரைப்படநகரமாக வளர்ந்துள்ளது மாணவர்கள் படப்பிடிப்புக்கு வெளியே செல்ல வேண்டிய அவசியமே இல்லை; செலவும் குறைவு, பொலிவும் அதிகம். சரியான முறைகளைக் கற்றுக் கொள்ளும் நாம் சிக்கனப் படபிடிப்பையும் கடைப்பிடிக்க வேண்டாமா? செலவாளிகள் என்னும் கெட்ட பேரை ஒழித்திட வேண்டாமா? போதிய நிதி ஒதுக்கிப் புதுப்பிக்கப்பட்ட நம்நூலகம் அரிய பல நாட்களின் பொக்கிசம். நம் மாணவர்கள் அவைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வளர்ந்துள்ள வசதிகளை வைத்து முழு கவனத்தையும் கற்பதிலேயே செலுத்தி வான் புகழும் தொழிற் நுட்ப வாதிகளாக வளர என்சார்பிலும் என் சக ஆசிரியர்கள் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்பிக்கையுடன்

**M. பாலசுப்ரமணியன்**

முதல்வர்

*அரசு திரைப்படக் கல்லூரி*

# திரைப்படக்கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள்

1961 முதல் 1979 வரை

உயர்திரு. **பி. சிவதாணுபிள்ளை,** பி.எஸ்.சி. எல்.சி & எஸ்இ

1980 முதல் 1984 வரை

உயர்திரு. **எஸ். நாகராஜன்,** எல்.சி & எஸ்.சி.

1984 முதல் 1987 வரை

உயர்திரு. **ஜி. ராமானுஜம்,** பி.எஸ்.சி.,

1987 முதல் 1991 வரை

உயர்திரு. **ஜி. ராஜசேகரன்.** பி.ஏ., எல்.சி & எஸ்.சி.,

1991 முதல் 1992 வரை

உயர்திரு. **சி.எம்.வி. ரமணன்.** பி.ஏ.,

# GOLD MEDALIST

1993 - 1994

Direction
***Saravana Kumar***

Cinematography
***Venkatesawaran***

Editing
***S. Raju***

SR & SE
***A. Sivakumar***

F. P.
***Kottayan***

# ஆசிரியர் பக்கம்



நான் பெருமிதம் கொள்கிறேன், என் உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்கின்றது, திரைப்படக்கலை தனது மலர்ப்பாதையில் மாபெரும் வளர்ச்சி கண்டு கம்பீரமாக நூறாவது வயதை எட்டிப் பிடித்திருக்கும் இவ்வருடத்தில், திரைக்கலையின் வளர்ச்சியில் ஆலமரமாய் விளங்கும் நம் திரைப்படக்கல்லூரியில் பயின்று வருவதற்காக நான் பெருமிதம் கொள்கின்றேன்.

திரையுலகில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆண்டு கல்லூரியில் நம் பணி மிகவும் சிறிப்பாக அமைய வேண்டும் என விரும்பியது எங்கள் மாணவர் பேரவை. பேரவையின் பணியில் சிறந்த முறையில் உதவியாய் இருந்த ஆசிரியப் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும் இந்நேரத்தில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

இந்த ஆண்டு கல்லூரியின் ஆண்டுவிழா மலரினை தயாரிக்கும் பெரும்பொறுப்பினை நண்பர், பேரவைத் தலைவர் திரு. **ரமணகிரிவாசன்** அவர்கள் என்னிடம் அளித்தபோது நான் மிகவும் மகிழ்ச்சிஅடைந்தேன்.

இம்மலரினைச் சிறப்பிக்க மாணவ நண்பர்கள் அளித்த எண்ணக்குவியல்கள் அனைத்தும் முத்துக்களாய் இருந்தன. அவைகளை மாலையாக்கி மலரினை தயாரிக்கும்போது இணைய இயலாமல்போன நண்பர்களின் சிந்தனைகள் தவறென்று பொருளல்ல. தேவையான உங்களின் சிறந்த எண்ணங்களை இணைத்து இம்மலரினை உருவாக்கியுள்ளோம்.

இம்மலர் உருவாக பெரிதும் துணையாயிருந்த **முதல்வர்** அவர்களுக்கும், கௌரவ ஆசிரியர் **மதன் கேப்ரியல்** அவர்களுக்கும், ஆத்ம நண்பர் **ரமணகிரிவாசன்** அவர்களுக்கும், படைப்புகள் அளித்து சிறப்பித்த நண்பர்களுக்கும், உதவி ஆசிரியர்களுக்கும் மற்றும் அச்சிட்டோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*என்றும் அன்புடன்*

**கி. ஜெகந்நாதன்,** பி.எஸ்.சி.
(மூன்றாமாண்டு படத்தொகுப்பு)

*Best Wishes From*

## KAN & KASH TOURS & TRAVELS




K.S.D. VIJAYALAKSHMI
Off : 8257075
Res : 405753

13-A Ist FLOOR,
BBC PLAZA,
178-180 NORTH USMAN ROAD
T. NAGAR, MADRAS - 600 017

*Best compliments from :*

## CINTHAMANI DIGITAL EDIT

**(A DIVISION OF CINTHAMANI COMPUTER)**

**HIGH BAND U-MATIC EDIT STUDIO**

FACILITIES AVAILABLE :

- ★ HIGH BAND EDIT FACILITIES WITH AUDIO
- ★ 3D & 2D ANIMATION & GRAPHICS
- ★ CHARACTER GENERATION IN ALL INDIAN LANGUAGES.

15/2A, RAJABADHAR STREET, T. NAGAR,
MADRAS - 600 017.☎ : 8283842

S No.27, BIG BELL COMPLEX, 106, D.B. ROAD,
R.S. PURAM, COIMBATORE - 2.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெயலலிதா



மாண்புமிகு தமிழக செய்தித்துறை அமைச்சர் தென்னவன்

# மாணவர் பேரவை



தலைவர் :

**S. ரமணகிரிவாசன் B.B.A.**



துணைத் தலைவர் :

**G. சிவகுமார்**

பொருளாளர் :

**R. நடராஜன்**



செயலாளர் :

**V. செந்தில் குமார்**



இணைச் செயலாளர் :

**குமாரவேல்**

# இளைஞனே! நட!

C. இரவி B.A.,
(இரண்டாம் ஆண்டு இயக்கம்)

இளைஞனே!
நட
நிமிர்ந்தும் மட்டும்
நடக்காதே – இளைஞன் என்பதால்;
குனிந்தும் நட...

அங்காங்கே
பள்ளம் மேடுகள்,
உன் காலை
பதம் பார்த்துவிடும்.

ஆம் இளைஞனே,
ஓடிவரும் ஆற்று நீரை
அணை போடுவதில்
வல்லவர்கள் இவர்கள்!

நான் இளைஞனாச்சே?
அதெப்படி...?
இல்லை இளைஞனே,
புலி பதுங்குவதால்
பயந்தோடவில்லை;
பாயத்தான் போகிறது!

இளைஞனே!
நட
நிமிர்ந்து மட்டும்
நடக்காதே, இளைஞன் என்பதால்;
குனிந்தும் நட...

வழியில்
நங்கையொருத்தி,
நகை முகத்தோடு
வருவாள்
நகைத்து விடாதே!
பின்
நன்றியுடன் சுத்துவாய்
அவளுடன் – உனைச்
சுத்திவிட்டு சென்றுவிடும் காலம்.

ஆம் இளைஞனே!
நட
நிமிர்ந்தும் மட்டும்
நடக்காதே, இளைஞன் என்பதால்;
குனிந்தும் நட...

இளைஞனே
பேசாதே...
அதிகம் பேசாதே
கேட்டவர்களெல்லாம்
பெரியவராகி
பேசிய உன்னை
ஏமாளியாக்கி விடுவார்கள்!

ஆம் இளைஞனே!
நட
நிமிர்ந்தும் மட்டும்
நடக்காதே, இளைஞன் என்பதால்;
குனிந்தும் நட...

இளைஞனே
சிரிக்காதே
அடிக்கடி சிரிக்காதே
உனக்கு
முத்திரை குத்திவிட்டு
அவர்கள் சிரிப்பார்கள்...

ஆம் இளைஞனே!
நட
நிமிர்ந்தும் மட்டும்
நடக்காதே, இளைஞன் என்பதால்;
குனிந்தும் நட

இளைஞனே
விரிக்காதே
படுக்கை விரிக்காதே
இரவாகவில்லை இன்னும்
இரவாகவில்லை – ஆம்
உன்னைப் பொருத்த மட்டில்!

உன் வாழ்க்கையில்
விடியலே இல்லாதபோது
நீயெப்படி
விழியுறங்கலாம்?

ஆம் இளைஞனே!
நட
நிமிர்ந்தும் மட்டும்
நடக்காதே, இளைஞன் என்பதால்;
குனிந்தும் நட...

## "THREE CHEERS FOR YOU "

*Preserve these three - Good books, Deeds, Friends.*

*Control these three - Desire, Temper, Tongue.*

*Avoid Haste in these three - Business, Marriage, Travel*

*Don't waste these three - Energy, Money, Time.*

*Have a Heart for these three - Children, Hungry, Handi Caped.*

*These three always pay - Prayers, Hardwork, Knowledge.*

*Be ready for these three - Death, Downfall, Sorrow.*

*I. SHARFUNDEEN*

***H.O.D. (Sound Recording and Sound Engg.)***

# பயணம்

எஸ். முத்துமாணிக்கம்
உதவி விரிவுரையாளர்
ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல் துறை

இமைகள் மூடா இளைஞர்கள் நாங்கள் !
இமயம் புரட்டும் எங்கள் கைகள்!
சினிமா உலகின் நாளைய மன்னர்கள்!
விடியல் காட்டும் சூரியன் நாங்கள்!

விருட்ச மாகும் வீரிய விதைகள்!
மண்ணின் ஆழம்பார்க்கும் அகன்ற வேர்கள்!
தீயவை எரிக்கும் தீயின் நாக்குகள்!
நோய்களைத் தீர்க்கும் நவீன மருந்துகள்!

இனி,
வாழ்வை நோக்கி எங்கள் பயணம்
வசந்தம் நோக்கி எங்கள் பயணம்
வெளிச்சம் நோக்கி எங்கள் பயணம்
வானை நோக்கி எங்கள் பயணம்

வண்ணக் கனவுகளை எல்லாம்
நிஜமாய் ஆக்கும் எங்கள் பயணம்
எங்கள் கனவுகளை எல்லாம்
நிஜமாய் ஆக்கும் இந்தப் பயணம்



# வணங்குகிறோம்

தமிழ்த் திரையுலகின் பெருமையினை உலக அரங்கில் அரங்கேற்றிய நம் தமிழ்த் திரையுலகின் நடிப்புச் சக்கரவர்த்தி, நடிப்புலக மாமேதை, நடிகர் திலகம் டாக்டர் செவாலியே **சிவாஜிகணேசன்** அவர்களை வாழ்த்த எங்களுக்கு வயதில்லை என்றாலும், வணங்குகிறோம்.

# திரைப்படக்கல்லூரி 31—வது ஆண்டு விழா

ஓவியர் அமரர் K.மாதவன் வீட்டுக்கு, எனது மானசீக குருவான ஓவியர் R.நடராஜன் ஒருநாள் என்னை அழைத்துச் சென்றார். திருவநந்தபுரம் மகாராஜாவின் அரண்மனையை அலங்கரிக்கும் ரவிவர்மா பாணி – ஓவியங்களைத் தீட்டும் 'ராயல் பெயிண்டாஸ்'பரம்பரைச் சேர்ந்தவர்கள் நான் மேலே குறிப்பிட்ட ஓவியர்கள்.

PORTRAITS– வரைவதில் K.மாதவன் திறமைசாலி 'முத்தாரம்' – 'உமா'– போன்ற வார இதழ்களிலும் பெரிய கம்பெனிகளுக்கு காலண்டர் ஓவியங்கள் தீட்டுவதிலும் நாடக திரைச் சித்திரம் – பேனர் ஓவியம் திட்டலிலும் அவர் அந்நாளில் பெயர் பெற்றிருந்தார்.



திரைப்படங்களுக்கு விளம்பரம் செய்ய – தியேட்டர் முன்அலங்காரமாய் வைப்பப்படும் கட்–அவுட், 'பேனர்' ஓவியமுறையை தமிழகத்தில் அறிமுகப் படுத்தியவர் K.மாதவன்.

அன்றைய தினம், நான் கொண்டு சென்ற ஓவியங்களை – மதுரை, தஞ்சை, திருச்சி, திருவண்ணாமலை – போன்ற ஊர்களில் SPOTல் உட்கார்ந்து 8 மணிநேரம், 10 மணிநேரம் தீட்டிய வண்ண ஓவியங்களைப் பார்த்தார் மு.மாதவன்.

“இந்தப் பையனுடைய தகப்பன் ஓவியனில்லை. இவன் பரம்பரையில் யாருமே கலைஞர்களில்லை. ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸில் இவனைப் போல திறமைசாலிகள் பலர் ஒன்றாய் அமர்ந்து, போட்டிபோட்டு ஆர்வத்துடன் ஓவியம் தீட்டுகிறார்கள்.

நீங்கள் எவ்வளவு பெரிய ஓவியராக இருந்தாலும், உங்கள் ஒருவர் படைப்புக்களை மட்டுமே உங்கள் மகன் பார்க்க முடியும். அங்கு பலதரப்பட்ட ஓவியர்களுடைய வேலைப் பாடுகளை அவன் பார்த்து திறமையை விசாலப்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது யோசியுங்கள் என்றார்” – நடராஜன் மாதவனிடம் மறுவார்த்தை பேசாமல் மாதவன் தன் மகனை அடுத்த ஆண்டு ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸில் சேர்த்து விட்டார்கள்.

முறையான நடிப்பையோ - ஒளிப்பதிவையோ - இயக்கும்திறனையோ ஒருவர் ஸ்டுடியோவில் பெற - ஒரு தனிநபரிடம் கற்க ஆண்டு பலவாகும். ஒரு திறமைசாலி அடுத்தவனுக்கு அவ்வளவு எளிதில் தான் கற்ற வித்தையைச் சொல்லிக் கொடுக்கமாட்டான்.

எனவே, நடிப்பு - ஒளிப்பதிவு - ஒலிப்பதிவு - இயக்கம் ஆகிய பிரிவுகளில் அடிப்படையிலிருந்து அறிந்து கொள்ள திரைப்படக்கல்லூரி போல ஒரு இடம் எதுவுமிருக்க முடியாது.

அடிப்படை ஆர்வம், திறமை இருப்பின் அதை தெளிவாக ,தைரியமாக வளர்த்துக் கொள்ள அங்கு வாய்ப்பு அதிகம்.

கடந்த 20 ஆண்டுகளில், திரையுலகில் அகில உலக தரத்துடன் ஒளிப்பதிவு செய்த ஒளிப்பதிவாளர்கள் பலர் சென்னை திரைப்படக் கல்லூரியில் உருவானார்கள்.

வியாபாரரீதியான படங்களில் பிரம்மாண்ட படைப்புக்களை உருவாக்கி மலைக்கச் செய்தவர்களில் பலர் இந்தக் கல்லூரியில் தயாரானவர்கள்.

இன்னும் எடிட்டிங், ஒலிப்பதிவு, ப்ராசசிங் இவற்றில் தேர்ச்சி பெற்ற பலர் திரையுலகை எளிதாக ஆக்ரமித்து பெருமை சேர்க்கின்றனர்.

நடிப்புக் கலையில் அடிப்படைகள் - குழப்பமின்றி இங்குகற்றுத் தரப்படுகின்றன.

கோடிக்கணக்கில் முதலீடு செய்து அகன்ற திரைபடங்களை உருவாக்க உந்து சக்தியாக இருந்தவர்கள் இந்த அரசு திரைப்படக்கல்லூரி மாணர்வகளே.

இன்று வெளியே வரவுள்ள இளைஞர்கள் - மிகக் குறைந்த முதலீட்டில், மிக உயர்ந்த - கருத்துச் செறிவுள்ள - அர்த்தமுள்ள படங்களை உருவாக்கி திரையுலகைக் காப்பாற்ற முயலவேண்டும்.

முந்தைய தலைமுறைகள், கரடுமுரடான காடுகளில் போக்கிடம் தெரியாமல் நடந்து, போராடி உங்களுக்கு பாதையமைத்து வழுக்கிச் செல்லும் தார்ரோடு போட்டுக் கொடுத்துள்ளனர்.

இன்றைய தலைமுறைக்கு வானவளாவிய எதிர்காலம், வாய்ப்புகள் உள்ளன. அதே அளவு போட்டியும் உள்ளன.

திரையுலகில், இந்த ஆண்டு பிரபலமாகியுள்ள இயக்குநருக்கு, ஒளிப்பதிவாளருக்கு அடுத்த ஆண்டு - வெளிவரும் கல்லூரிமாணவனே தொழில் போட்டியாக வருகின்ற சூழல் உள்ளது.

இன்று திரையுலகின் வெற்றிவாய்ப்புக்களும், தோல்வியின் அழுத்தமும் பல மடங்கு அதிகரித்துவிட்டன.

ஒரு நாட்டையே ஆளும் நிலைக்கு உயர்ந்த ஒரு நடிகனுக்கு 7 முதல் 9 லட்சம் சம்பளமே ஒரு படத்துக்கு தரப்பட்டது. இன்று தமிழ்ப்படக் கதாநாயகன் $1^1/_2$ கோடி ஒரு படத்திற்கு சம்பளமாகப்பெறும் அளவு வாய்ப்பு உள்ளது.

---

✯ Film Champer - 1939 ஏப்ரல் மாதம் துவங்கப்பட்டது.
✯ Post சின்க்ரனைசேஷன் முறையில் பாடல் பதிவு செய்யப்பட்ட முதல்தமிழ்படம் "ஸ்ரீவள்ளி"
✯ 18 நாட்களில் எடுக்கப்பட்ட முதல் தமிழ்படம் "நெஞ்சில் ஓர்ஆலயம்"

நடனக்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்ற ஒருவர் நான்குபடங்கள் முடித்தவுடனே ஒருகோடி சம்பளம் கேட்க கூடிய அளவு வியாபாரம் பல எல்லைகளைக் கடந்துள்ளது.

தோல்விகளும் அப்படியே. 15 லட்சம் சம்பளம் வாங்கிய கதாநாயகனை – பத்து ஆண்டுகள் காதல் மன்னனாக இருந்த ஹீரோவை எளிதாக உதறித் தள்ளி மக்களில் மறந்துவிட முடிகிறது.

இன்றைய இளைய தலைமுறையிடம் மிகுந்த அறிவும், ஆற்றலும் உள்ளன. லட்சிய வெறியுள்ளது. கடுமையாக உழைக்கும் ஆர்வமுள்ளது. எந்த கெட்ட பழக்கத்தையும் உதறித்தள்ளும் மனோபலம் உள்ளது.

ஆனால், நினைத்த மாத்திரத்தில், வெற்றிகிட்டிவிட வேண்டும். இருபதுகளில் லட்சியத்தை எட்டி, முப்பதுகளில் வாழ்க்கையை முடித்து விட வேண்டும் என்ற அதிக வேகம் உள்ளது.

தோல்விகளைத் தாங்கிக் கொள்ளவும் – நீடித்த புகழ் நெடுங்கால வாழ்வு வாழவும், பொறுமையுடன் உழைக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

எத்தனை ஆயிரம் பேர் போட்டிக்கு வந்தாலும், உங்கள் சாதனை தனித்து விளங்கும். உயரவைக்கும் ஒரு உயர்ந்த வாழ்வை, உரியவாழ்வை படைத்தவன் அளித்திடுவான் என்ற தன்னம்பிக்கை வேண்டும். வெற்றி என்றும் உங்களுடையதே. கடுமையாக உழையுங்கள் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு முன்னால் உள்ளது.

வாழ்க வளர்க்

**சிவகுமார்**


*Best wishes from*

**G.V. FILMS [LTD]**

SUJATHA CENTRE
NO : 4, SESHADRI ROAD,
ALWARPET,
MADRAS - 600 018.

***With best wishes from :***

**FUJI**

A NEW GENERATION OF COLOR NEGATIVE FILM
PROMISES STAR QUALITY PERFORMANCE

**FUJI SUPER "F" SERIES**

| | | | | |
|---|---|---|---|---|
| 35 MM | NORMAL | F-125 | ASA | TYPE 8531 |
| 35 MM | HISPEED | F-500 | ASA | TYPE 8570 |
| 35 MM | DAYLIGHT | 4-640 | ASA | TYPE 8521 |
| 35 MM | HISPEED | F - 2500 | ASA | TYPE 8561 |
| 35 MM | HISPEED | F - 250 | ASA | TYPE 8551 |
| 16 MM | NORMAL | F - 125 | ASA | TYPE 8631 |
| 16 MM | HISPEED | F - 500 | ASA | TYPE 8670 |
| 35 MM | INTERMEDIATE | TYPE | 8501 | |

FOR FURTHER DETAILS CONTACT :

**CINEFILM DISTRIBUTORS**
OFFICE NO.2, 1ST FLOOR
JHAVER PLAZA
1-A NUNGAMBAKKAM HIGH ROAD
MADRAS 600 034

TEL NO. 827 1070

சினிமா/டி.வி யில்

# நடிக்க

ஆர்வமுண்டா!



ஏக்நாத் வீடியோ & பிலிம் இன்ஸ்டிடியூட்
நடிப்பு பயிற்சியில்
சேரும் அனைவரின் நடிப்புத்திறனை
நாளைய சினிமா & டி.வி நட்சத்திரங்கள்
என்ற வீடியோ கேசட்டில்

**இலவசமாக**

உங்கள் முழு விலாசத்துடன்
இடம் பெறச் செய்கிறோம்.

அனைத்து மொழி திரைப்பட

**இயக்குனர்கள்**
**தயாரிப்பாளர்கள்**

சங்கங்களுக்கு
நாளைய சினிமா & டி.வி. நட்சத்திரங்கள்
வீடியோ கேசட்டுகளை **இலவசமாக** வழங்கி
உங்கள் நடிப்பாற்றலை தயாரிப்பாளர்களும்,
இயக்குனர்களும் பார்க்கச் செய்கிறோம்.

நடிப்புப்பயிற்சியுடன்,

- ★ ஸ்டில் போடோகிராபி,
- ★ வீடியோ கேமராமேன்,
- ★ யூமேடிக் எடிட்டிங்,
- ★ யூமேடிக் கேமராமேன்,

ஒரு மாத பயிற்சி வகுபபுகள ஒவ்வொரு
மாதம 1.ம் தேதி 15.ம் தேதி ஆரம்பம்

விபரங்களுக்கும் விண்ணப்ப பாரத்திற்கும் ரூ **25/-**
க்கு ஆன டிமாண்ட் டிராப்ட் **ஏக்நாத் வீடியோ&**
**பிலிம் இன்ஸ்டிடியூட்** என்ற பெயரில் எடுத்து
கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

# ஏக்நாத்

**வீடியோ & பிலிம் இன்ஸ்டிடியூட்**

**(Regd - with Govt of TAMILNADU)**

**40A**, பசுல்லா சாலை, தி.நகர்,சென்னை 17.
**Phone : 8263323, 8256922, 8261927, 8521577, 835098, 8259513. Fax : 044 - 8258506.**



*Best wishes from*

## ATLAS TRADERS

## ATLAS METALS

- BUILDER'S HARDWARE
- ALUMINIUM EXTRUSIONS
- ARCHITECTURAL ALUMINIUM FABRICATORS

S. HAJA

Ph : 560941
587181
567418

Head Office :
59/8, DEVARAJA MUDALI ST.,
MADRAS - 600 003

Brand Office :
57, BROADWAY
MADRAS - 600 108
Ph : 5231187

# திரைப்பட இயக்கம்

K. செந்தில் குமார் B.Sc.,
(மூன்றாம் ஆண்டு இயக்கம்)

ஒரு திரைப்படத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது இயக்குனர்களே. அனைத்து தொழில் நுட்ப வல்லுனர்களையும் ஒருங்கிணைத்து திரைப்படமெனும் ஆலமரம் வளர ஆணி வேராக இருப்பவர்கள் இயக்குனர்களே. எனவே தான் இயக்குனர்களை **Captain of the ship** என்று அழைப்பது வழக்கம். திரைப்படக்கல்லூரியில் பயின்று இன்று முன்னனியில் இருப்பவர்களின் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| ருத்ரையா | – | அவள் அப்படி தான், கிராமத்து அத்தியாயம் என உலகதரமுள்ள படங்களை இயக்கியவர். |
| இராபர்ட் இராஜசேகரன் | – | பாலைவனச் சோலை, சின்ன பூவே மெல்ல பேசு, மனசுக்குள் மத்தாப்பு என வெற்றிப்படங்கள். |
| ஆபாவணன் | – | ஊமை விழிகள், உழவன் மகன், செந்தூரப்பூவே. (படங்களின் கதை – திரைக்கதை இணைஇயக்கம் தயாரிப்பு) படங்களின் மூலம் திரைப்பட கல்லூரிக்கு திருப்பு முனையைஏற்படுத்தியவர். |
| அரவிந்தராஜ் | – | ஊமைவிழிகள், உழவன்மகன், தாய்நாடு, கருப்புநிலா. |
| பி.ஆர். தேவராஜ் | – | செந்தூரப்பூவே |
| கலைமாமணி R.V. உதயகுமார் | – | உரிமை கீதம், சின்னக் கவுண்டர், எஜமான், பொன்னுமணி என பல இனிய கிராமிய வாசனையுடன் கூடிய வெற்றிபடங்கள். |
| R. தியாகரான் | – | வெற்றி மேல் வெற்றி, மாநகர காவல். |
| R. K. செல்வமணி | – | புலன் விசாரணை, செம்பருத்தி, கேப்டன் பிரபாகரன் என பல வெள்ளி விழாபடங்களின் இயக்குனர். |
| எஸ்.டி.சபா | – | எங்க தம்பி, பரதன் |
| செய்யாறு ரவி | – | தர்மசீலன் |
| ராஜ்குமார் | – | பொன் விலங்கு |
| இராஜேஷ்வர் | – | அமரன், இதயதாமரை |
| R. இளவசரன் | – | தாய்மொழி |
| J. பன்னீர் | – | சக்கரை தேவன் |
| ரமே கிரு ணன் | – | அதர்மம் |
| கேயார் | – | ஈரமான ரோஜாவே, வனஜா கிரிஜா |
| P.C. ஸ்ரீராம் | – | மீரா |
| பாபு கணேஷ் | – | கடல்புறா |
| நம்பிராஜ் | – | நிலா |
| சோலைராஜா | – | வள்ளிவரப்போறா |
| சுகாசினி | – | இந்திரா |
| நாசர் | – | அவதாரம் |

# ஒளிப்பதிவு

த. பாஸ்கர்
(மூன்றாமாண்டு ஒளிப்பதிவு)

ஒளிப்பதிவு தான் ஒரு திரைப்படத்திற்கே உயிரூட்டக் கூடியது. தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதுமான பல முண்ணனி இயக்குனர்களுக்கு ஒளிப்பதிவாளர்களாக இருக்க கூடியயவர்கள் நம் திரைப்பட கல்லூரி மாணவர்களே. இவர்கள் குறித்தவிபரங்கள் இங்கு இடம் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| ரவிவர்ம ராஜா | – | கருப்பு வெள்ளை பட காலத்திலேயே, தேசிய விருதுபெற்றவர். |
| நல்லுசாமி & ஞானசேகரன் | – | அவள் அப்படிதான் |
| அசோக்குமார் | – | 100 படங்களுக்கு மேல் ஒளிப்பதிவு செய்தவர் (நெஞ்சத்தை கிள்ளாதே படத்திற்காக தேசிய விருது) |
| நிவாஸ் | – | 16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில் என பலபடங்கள் (மலையாள படம் ஒன்றிற்காக தேசிய விருது) |
| பி. கண்ணன் (பாரதி ராஜாவின் கண்கள்!) | – | கடலோர கவிதைகள், முதல் மரியாதை எனபாரதிராஜாவின் பெரும்பாலான படங்கள் |
| P.C. ஸ்ரீராம் | – | பல வெற்றிப் படங்கள் (நாயகன் படத்திற்காக தேசிய விருது) |
| ரமேஷ் குமார் | – | ஊமை விழிகள், உழவன் மகன், தாய்நாடு,தங்கபாப்பா |
| ரவியாதவ் | – | புதியவானம், செம்பருத்தி |
| அப்துல்ரகுமான் | – | கிழக்குவாசல், சிங்காரவேலன், ராஜகுமாரன் என பல படங்கள் |
| கிச்சாஸ் | – | கிராமத்து மின்னல், அரண்மணை கிளி உட்பட பல படங்கள். |
| ராஜிவ் மேனன் | – | பம்பாய் (முன்னனி விளம்பரபடங்கள்) |
| அரவிந்தன் | – | சீவலப்பேரிபாண்டி (பல விளரம்பர படங்கள்) |
| பன்னீர் செல்வம் | – | உன்னை வாழ்த்தி பாடுகிறேன், உள்ளே வெளியே, அதிரடிப்படை என பல படங்கள். |
| எம்.எம். ரங்கசாமி | – | செந்தூரப்பூவே |
| சிவா | – | நம்ம அண்ணாச்சி உட்பட பல படங்கள் |
| முத்து கணேஷ் | – | புதியமுகம், பாசமலர்கள். |
| எம்.எஸ்.பிரபு | – | மகாநதி, வியட்நாம் காலனி, எங்கிருந்தோ வந்தான். |
| கவியரசு | – | வா அருகில் வா |
| தங்கர் பச்சான் | – | மலைச்சாரல், மோகமுள் |
| சரவணன் | – | புதிய மன்னர்கள் |
| மாயா | – | எங்கதம்பி |
| ராய் | – | தலைவாசல், |
| நம்பி | – | ஈரமான ரோஜாவே |
| மோகன் | – | வீட்ல விஷேசங்க |
| யூ.கே. செந்தில் குமார் | – | கருப்பு வெள்ளை, அமைதிப்படை |
| மணிகண்டன் | – | அதர்மம் |
| சுபாகர் | – | வள்ளிவரப்போறா |
| வேலு பிரபாகர் | – | அதிசய மனிதன், நாளைய மனிதன் |

இது தவிரவும் பலர் திரைப்பட மற்றும் வீடியோ விளரம்பர துறைகளில் முண்ணனியில் உள்ளனர்.

# படத்தொகுப்பு

S. சுந்தர்ராஜ் B.Com.,
*மூன்றாம் ஆண்டு படத்தொகுப்பு*

ஒரு திரைப்படம் உருவாவதே படத்தொகுப்பு மேஜையில் தான் என்பார்கள். சிறந்த திரைப்படம் ஒன்றில், அதன் எடிட்டரின் பங்கு மிகவும் முக்கியம். எடிட்டிங் துறையில் முண்ணனியில் இருந்துவரும் நம் மாணவர்களை பற்றி விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜி. ஜெயச்சந்திரன் | – ஊமை விழிகள் | R.D. அண்ணாதுரை | – செந்தூரப்பூவே, சின்னபூவே மெல்ல பேசு |
| அசோக் மேத்தா | – இணைந்த கைகள் | ரமேஷ் | – அதர்மம் |
| உதய சங்கரன் | – செம்பருத்தி | ராஜ் | – தலைவாசல் |
| போஜ ராஜன் | – கேப்டன் மகள் | மகேந்திரன் | – தர்மசீலன் |

தொலைக் காட்சி துறை

தேவராஜ், என். ராஜ், எட்வின் ராஜ்குமார், சிவமணி ஆகியோர்முண்ணனி வீடியோ படத்தொகுப்பாளர்களாக உள்ளனர். டி.டி.கே. சக்ரவர்த்தி. ஹைதராபாத் தொலைகாட்சியில் தயாரிப்பாளராக உள்ளனர். எம். ராஜேந்திரன் ஆஸ்திரேலியாவில் பணியாற்றி வருகிறார். அன்டனி, ஹைவே – நைஜீரிய தொலைக்காட்சியில் பணிபுரிந்துவருகிறார். சைமன் பாலச்சந்தர். தலைமை படத்தொகுப்பாளராக உள்ளார். வைர குணசேகரன்; சிங்காரவேலு, தாமோதரன் சுரேஸ் குமார் சென்னை தொலைக்காட்சியில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் அனைத்து வீடியோ படத்தொகுப்பு நிலையங்களிலும், செயற்கைகோள் ஒளிப்பரப்பு அலுவலங்களிலும் நம்முடையமாணவர்களே முண்ணணியில் இருந்து வருகின்றனர்.

*Best Compliments from*



- WELL WISHER **ABRAHAM**

# ஒலிப்பதிவு

G. **சிவக்குமார்**
(மூன்றாம் ஆண்டு ஒலிப்பதிவு)

இந்தியா எங்கும் உள்ள ஒலிப் பதிவு அரங்குகளில் நம் மாணவர்கள் ஆதிக்கமே நிறைந்துள்ளது. **1988**ஆம் ஆண்டு ஹரிகுமார் என்ற மாணவர் ஒலிப்பதிவுக் கென்று தேசிய விருதைப் பெற்றுத் திரைப்படக்கல்லூரி மாணவர்களுக்கு என்று தனியிடத்தைப் பெற்றுத்தந்தார். கல்லூரியின் முன்னாள் முதல்வர்களான பி.சிவதாணுப் பிள்ளை, த. நாகராஜன், இவ்விருவருமே கல்லூரியின் ஒலிப்பதிவுத் துறையின் மாணவர்களே. ஏ. வெங்கடாசலம் என்கிற கல்லூரியின் மாணவர் ஒலிப்பதிவுத் துறையின் தலைவராக இருந்து கொண்டு ஒலிப்பதிவிற்கும், கல்லூரிக்கும், மாணவர்களுக்கும் சிறந்த தொண்டாற்றி சிறந்த முன்னோடியாக இருந்தார்.

இன்று ஒலிப்பதிவாளர்களிடையே தன்னிகரற்று விளங்குகிறார் திரு.நாராயணன் ஏ.வி.எம். ஒலிப்பதிவுக் கூடம் 'பி' அரங்கில் சம்பத் என்பவரும் 'ஐ' அரங்கில் எம். ரவி என்பவரும் தலைமைப் பொறியாளர்களாக விளங்குகின்றனர். செல்வராஜ், சுதாகர் 'பிரசாத் 70 எம்.எம்' –லும் ஸ்ரீநீவாச மூர்த்தி 'சுஜாதா' ஒலிப்பதிவுக் கூடத்திலும் தலைமைப் பொறியாளர்களாக உள்ளனர். 1992ம் ஆண்டு சிறந்த ஒலிப்பதிவிற்கான தேசிய விருது பெற்ற கோதண்டராஜன் நமது திரைப்படக் கல்லூரியைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிச்சேரி தொலைக்காட்சியில் இயக்குனராக தன் பணியைச் செய்து வருகிறார் சேனாபதி. கமால் என்பவர் மேனேஜராக புதுடெல்லியில் உள்ள பி.டி.ஐ. இல்உள்ளார். இம்மானுவேல் கருணராஜ் என்பவர் ஒலிப்பதிவிலும் ஒலிப்பதிவு கூட நிர்மானித்தலிலும் சிறந்து விளங்குகிறார்.

இத்துறையில் பயின்ற ஆதித்யன் இசைத் துறையில் அமரன், நாளையசெய்தி சீவலப்பேரி பாண்டி போன்ற திரைப்படங்களின் மூலம் இசை பணியில் தலை சிறந்து விளங்குகிறார்.

| | |
|---|---|
| சோம சுந்தரம் | – தலைமை கண்காணிப்பு |
| பொறியாளர் | – பம்பாய். |
| கே. பாலு | – மேலாளர், போட்டோபோன், சென்னை. |
| சாலமன் | – மேலாளர், போட்டோபோன், செகந்திராபாத் |
| கணேஷ் | – மேலாளர், போட்டோபோன், பெங்களூர் |
| மோகன் பாலாஜி | – உதவி மேலாளர், போட்டோ போன், கொச்சின் |
| டி.கே.பாலசுப்பிரமணியன் | – தொழில் நுட்ப அதிகாரி போட்டோபோன், சென்னை |
| சேகர் | – தொழில் நுட்ப அதிகாரி போட்டோபோன், பெங்களூர் |
| வரதராஜன் | – உதவி மேலாளர் போட்டோபோன் தொழிற்கூடம், கோவா |
| கல்யாணவரதன் | – மேலாளர், ஹைதராபாத் |
| குமார் | – ரெஷி டென்சியல் பொறியாளர் வெஸ்ட்ரக்ஸ், ஹீப்ளி |
| ராமசுப்பிரமணியன் | – தலைமை தொழில் நுட்ப அதிகாரி, போட்டோபோன், சென்னை |
| ஆர்.ஸ்ரீநிவாசன் | – உதவி கண்காணிப்பு பொறியாளர் ஆர்.சி. |
| பாஸ்கர் | – உதவி இயக்குனர், சென்னை தொலைக்காட்சி |
| பொன்னுதுரைசாமி | – தயாரிப்பாளர், சென்னை வானொலி நிலையம் |
| இஸ்மாயில் செரிப் | – இந்திதிரைப்பட தயாரிப்பாளர் இயக்குனர் பகுதி மேலாளர் சினிரமா சென்னை |
| நவீனா | – ஆராய்ச்சி உதவியாளர் அமெரிக்கன் இன்ஸ்ட்யூட் புது டெல்லி. |

# திரைப்பட இரசாயன கழுவுதல்

S. சரவணன்
(மூன்றாம் ஆண்டு படப்பதனிடல்)

திரைப்பட இரசாயன கழுவுதல் மக்களுக்கு புலப்படாத ஒரு முக்கிய பங்கு வகிப்பதாகவும், நம் ஆசிய கண்டத்தில் உள்ள அத்தனை திரைப்படக் கல்லூரிகளிலும் இல்லாத இத்துறை நம் கல்லூரியில் மட்டுமே இருப்பது நாம் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். இத்துறையில் பயின்ற சரோ அவர்கள் இன்று திரையுலகில் உள்ள முக்கியமான ஸ்டில் போட்டோ கிராப்பர்களில் இவரும் ஒருவர்.

அதர்மம் படத்திற்கு கதை வசனம் எழுதிய சந்திரமோகன்நாக் விரைவில் இயக்குனராகவும் உயர்ந்து கல்லூரிக்கும் இத்துறைக்கும்பெருமை சேர்க்க உள்ளார். மேலும் பல்வேறு திரைப்பட இரசாயனக் கூடங்களில் நம்மாணர்வகள் பெரும் பங்கு வகித்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| ராமராஜன் | – | உதவி மேலாளர், ஹிந்துஸ்தான் போட்டோபிலிம், சென்னை. |
| காளன் | – | மேலாளர், ஹிந்துஸ்தான் போட்டோபிலிம், சென்னை |
| மகேஷ்வர் | – | உதவி மேலாளர், ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்,சென்னை. |
| ராமமையா | – | உதவி மேலாளர், ஹிந்துஸ்தாய் போட்டோ பிலிம், சென்னை. |
| ஸ்ரீ ராமச்சந்திரன் | – | விஞ்ஞான உதவியாளர், ஐ.எஸ்.ஆர்.ஓ. திருநெல்வேலி |
| கண்ணன் | – | விஞ்ஞான உதவியாளர் ஐ.எஸ்.ஆர்.ஓ. திருவனந்தபுரம். |
| சிவராமன் | – | தலைமைத் தொழில் நுட்பாளர் |
| தேவராஜ் & பொன்னையன் | – | பிரசாத் கலர் லேப், சென்னை தொழில் நுட்பாளர்கள் பிரசாத் கலர் லேப், சென்னை. |
| போலன் & சேதுபதி | – | உதவி மேலாளர்கள் ஹிந்துஸ்தான் போட்டோபோன், சென்னை |
| எஸ். சந்தானம் | – | இரசாயனகூடப் பொறுப்பாளர் மத்திய திரைப்படப்பிரிவு, புதுடெல்லி. |
| சந்திர சேகர் | – | விஞ்ஞான உதவியாளர், ஐ.எஸ்.ஆர்.ஓ., ஸ்ரீ ஹரி கோட்டா. |
| சிவமணி | – | தொழில் நுட்பாளர், மோஹன் கிராபிக்ஸ் |
| சிவகுரு | – | தொழில் நுட்பாளர், கோடாக், சென்னை. |
| கே.எம்.கே.தாஸ் | – | உதவி இயக்குனர், ஹிந்துஸ்துான் போட்டோபிலிம், சென்னை. |
| ஏ.ஆர். முரளி | – | மேலாளர், எச்.பி.எஃப், ஊட்டி. |
| ஆர்.டி.போஜன் | – | இணை இயக்குனர், எச்.பி.எஃப்ல், சென்னை. |

- மற்றும் பி.ராஜா, அ.மா.ஜி. பேனாலன், ஆகியோர் எச்.பி.எஃப்ல் முக்கிய பொறுப்பில் இருக்கின்றனர்.

---

★ முதல் தமிழ் பேசும் படம் - காளிதாஸ் - (1931)

★ முதல் 'A' சர்டிபிகேட் கொண்ட படம் - மர்மயோகி - (1951)

*With best wishes from*

Phone: 4837249
4832636

**ॐ Shri Sairam Arts (P) LTD.**

Harihar Apartments, No.6, Vethachalam Nagar,
1st Street, Subburayan Nagar, Madras - 24.

# நடிப்பு

நம் திரைப்பட கல்லூரியின் நடிப்பு துறையில் பயின்ற பலர் இன்றுபெரும் புகழ்பெற்று, நம் கல்லூரிக்கும் பெருமை சேர்ந்துவருகின்றனர். அவர்கள் பற்றிய விபரம்

| | | |
|---|---|---|
| சத்யஜித் | – | 16 வயதினிலே |
| ரவிந்தர் | – | அவள், அப்படிதான், ஒருதலை ராகம் |
| அர்ச்சனை | – | தாசி, வீடு என்ற இருபடங்களுக்காக தேசிய விருது பெற்ற நடிகை. |
| நாசர் | – | தேவர்மகன், நாயகன், தலைவாசல் என தனக்கெனதிரையுலகில் ஓர் இடத்தை தக்க வைத்து கொண்டவர். |
| ரகுவரன் | – | ஏழாவது மனிதன் மூலம் அறிமுகமான முண்ணனி நடிகர். |
| ராம்கி | – | செந்தூரப்பூவே இணைந்தகைகள் உட்பட பல படங்கள். |
| அருள்பாண்டியன் | – | ஊமை விழிகள், இணைந்தகைகள் உட்பட |
| ஆனந்தராஜ் | – | முண்ணனி வில்லன் நடிகராக பல படங்கள் |
| கரிகாலன் | – | சோலையம்மா உட்பட பல படங்கள் |
| சரவணன் | – | வைதேகிவந்தாச்சு, அபிராமி உட்பட பல படங்கள் |

இவர்களைப் போன்றே மெல்லப்பேசுங்கள் படத்தின் வசந்த், சின்னிஜெயந்த், அருந்ததி, பிரிதிவிராஜ் போன்ற பல கலைஞர்கள் நம்தமிழ்த் திரையுலகில் கலைப்பணி புரிந்து வருகிறார்கள். பாபுகணேஷ் தயாரிப்பாளராகவும், இசை அமைப்பாளராகவும்,இயக்குநராகவும் பிரகாசித்தவர். தலைவாசல் விஜய், பீட்டர்ராஜ், லிவிங்ஸ்டன் போன்றோர் இன்று நடிப்பில் முன்னணிவகிக்கின்றனர். நம்மொழி தவிர சிராஜ்குமார், தெலுங்கில் நகைச்சுவை நடிகர்சுபலேகா சுபாகர், மன்னணி கதாநாயகன் டாக்டர்ராஜசேகர் போன்றோர் இத்துறையில் பயின்று இப்போதுகலைஉலகில் பிரகாசிப்பவர்கள்.

---

# சிற்பி

கல்லினையும் கலையாக்கும் சிற்பியைப் போற்றாமல்
கல்லாதவன் தானே அவன் என இகழும்
பொல்லாத செல்வந்தர் வருந்துவார், ஏனெனில்
சொல்வன்மை மிக்க புலவரையும் புரவலரையும்
நல்ல வழியில் இணைத்திடும் பாலமாக
கல்லா்த கலைஞனின் கலைசிசுவாம் சிற்பம்
நல்லோர் வாழ்த்த நலமாய்த் திகழும்
செல்லாக் காசான செல்வந்த சிசுக்களோ
இல்லாத உறவெல்லாம் கொண்டாடி அவரின்
கல்லாப் பெட்டியைக் கடிவாய்ப் பெற்றபின்
இல்லாத நோயெல்லாம் அவர் மீதேற்றி – மனிதன்
செல்லாத உலகிற்கு அவர் மறுத்தாலும்
உல்லாச பயணமாய் உறங்கவைத் தனுப்புவர்
கல்லில் சிற்பமாய் மாண்டவர் மீளுவர்.

சு. தட்சினாமூர்த்தி
சி.நி. உதவியாளர்.

## Calling gourmets, film buffs and lovers of the good life.

*For a lunch or dinner date with a glaxy of stars all you need to do is drive over to Tharamani.*

*Get the best for your highs, lows and the in-betweens at our Bar.*

*Gamma Gamma*
*(Fast Food Restaurant)*

*Thali*
*(Restuarant)*

# THARAMANI

*Talkies*

A Multicusine Garden Restaurant
Dr. J. Jayalalitha Film City, Old Mahabalipura Road, Tharamani, Madras.
For reservations call : 2353984 / 2353987

***With best compliments from***

The Kgeyes Group

# மாணவர் பேரவை

அரவிந்த்
மூன்றாம் ஆண்டு இயக்கம்

இந்த ஆண்டு துவக்கம் முதலாகவே பல்வேறு கருத்தரங்குகள். மாணவர் பேரவையின் சார்பில் சிறப்பான முறையில் நடத்தப்பட்டன.

“திரைப்படங்களில் இயக்குனரின் பங்கு” என்கிற தலைப்பில் இயக்குனர் **மகேந்திரன்** அவர்களுடைய கருத்தரங்கு நடைபெற்றது. அவருடைய "முள்ளும் மலரும்" திரைப்படம் திரையிடப்பட்டு அவருடன் அது விவாதிக்கப்பட்டது. நமது கல்லூரி மாணவியான **திருமதி. சுகாசினி**யின் இயக்கத்தில் தயாரான **இந்திரா** திரைப்படம் திரையிடப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

“சிறுபடங்களை எடுப்பது எப்படி” என்கிற தலைப்பில் படத்தொகுப்பாளர் **B. லெனின்** அவர்களுடைய கருத்தரங்கு நடத்தப்பெற்றது. இயக்குனர் **ஞானசேகரன்** அவர்களுடைய "மோகமுள்" திரைப்படம் திரையிடப்பட்டு அது விவாதிக்கப்பட்டது.

நம் மாணவர்களின் கலைத் திறைமையை ஊக்குவிக்கும் வண்ணம் பேச்சு போட்டிகள் நடத்தப்பட்டன. ஆசிரியர்களுக்கான போட்டிகளிலும் பெருமளவு ஆசிரியர்கள் கலந்து கொண்டு கலைவிழாவை சிறப்பித்தனர்.

பிரபல இயக்குனர் **S.P. முத்துராமன்** அவர்கள் கலந்து கொண்டசிறப்பு கருந்தரங்கு இயக்குதல் மற்றும் நடிப்புதுறை மாணவர்களுக்காக நடத்தப்பெற்றது. அதில் இதர மாணவர்களும் கலந்து கொண்டு பங்கு பெற்றார்கள்.

சினிமாவின் **100வது ஆண்டு விழா**வை கொண்டாடும் பொருட்டு "பராசக்தி" துவங்கி இன்று வரை வெளியான பல சிறப்பான ***Trend*** களை ஏற்படுத்திய திரைப்படங்கள் திரையிடப்பட்டன. இந்த **100** ஆண்டு விழா துவக்க நிகழ்ச்சியில் திரைச் சிற்பி **ஆபாவாணன்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நடிப்பின் முக்கியத்துவம் குறித்த சிறப்பு கருத்தரங்கத்தில் நடிகர் **சிவகுமார்** கலந்து கொண்டு சிறப்பான முறையில் நடத்தித்தந்தார். அது நடிப்புதுறை மாணவர்களுக்கு மட்டுமில்லாது அனைவருக்கம் உதவ கூடியதாக அமைந்தது.

பிரிட்டிஷ் திரைப்பட கல்லூரி மாணவரான ***Prints Guga*** தமிழகத்தில் எடுத்த சிறு திரைப்படம் பேரவை சார்பில் திரையிடப்பட்டு அவருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

- ✯ முதல் ***Science Fiction Film*** - கலையரசி
- ✯ முதல் சினிமா ஸ்கோப் படம் - ராஜராஜசோழன் (1973)
- ✯ முதல் வண்ணத் திரைப்படம் - அலிபாபாவும் 40 திருடர்களும் (1956)



கல்லூரியின் எழில்மிகு தோற்றம்



R. R. திரையரங்கில்

திரைப்படம் திரையிடப்படும் காட்சி



புகழ் பெற்ற கல்லூரி நூலகம்



# இயக்குதல் பிரிவு





இரண்டாம் ஆண்டு மாணவர்கள்



முதலாம் ஆண்டு
மாணவர்கள்



மூன்றாம் ஆண்டு மாணவர்கள்

# ஒளிப்பதிவு பிரிவு



முதலாம் ஆண்டு மாணவர்கள்



இரண்டாம் ஆண்டு மாணவர்கள்



மூன்றாம் ஆண்டு மாணவர்கள்

# படத்தொகுப்பு பிரிவு



முதலாம் ஆண்டு மாணவர்கள்



இரண்டாம் ஆண்டு மாணவர்கள்





மூன்றாம் ஆண்டு மாணவர்கள்

# ஒலிப்பதிவு பிரிவு



முதலாம் ஆண்டு மாணவர்கள்



இரண்டாம் ஆண்டு மாணவர்கள்




மூன்றாம் ஆண்டு மாணவர்கள்

# படப்பதனிடல் பிரிவு



முதலாம் ஆண்டு மாணவர்கள்



இரண்டாம் ஆண்டு மாணவர்கள்



மூன்றாம் ஆண்டு மாணவர்கள்

## நடிப்புத்துறை



படப்பிடிப்புத் தளத்தில் நம் கல்லூரி மாணவர்கள் (Break down, miss - en - scene)





வெளிப்புறப்படப்பிடிப்பில் நமது மாணவர்கள் (continuity....)







# உலக திரைப்பட விழா - 1995

இந்த வருடத்திற்கான உலக திரைப்பட விழா பம்பாய் நகரில் ஜனவரி 10 தேதி முதல் 20 ம் தேதி வரை இனிதே நடைபெற்றுமுடிந்தது. சினிமாவின் 100 ஆண்டு விழா என்பதால் இந்ததிரைப்படவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. முதன்முதலாக இந்தியாவில் உலகின் முதல் சினிமா **லூமியர்** சகோதரர்களால் பம்பாய் நகரில் திரையிடப்பட்டதால், சினிமாவின் 100வது ஆண்டை கொண்டாடும் 26வது உலக திரைப்படவிழா பம்பாய் நகரில் நடைபெற்றது மிகவும் பொருத்தமாக அமைந்தது.

உலக திரைப்பட விழாவை துவக்கி வைக்க நம் தமிழகத்தின் நடிகர் திலகம் **செவாலியே சிவாஜி கணேசன்** அவர்கள்அழைக்கப்பபட்டது நமக்கெல்லாம் மிகவும் பெருமை சேர்க்ககூடிய விஷயம். இந்தி முண்ணனி நடிகை மாதுரிதிட்சித் குத்துவிளக்கேற்ற செவாலியே சிவாஜி கணேசன் அவர்கள் தலைமை ஏற்க, சிறப்பான கலை நிகழ்ச்சியுடன் திரைப்படவிழாவின் துவக்க விழா சிறப்பாக நடந்தேறியது.

26வது திரைப்பட விழாவின் துவக்கநாள் திரைப்படமாக **ஷ்யாம் பெனகலின்** 'மம்மோ' என்ற, திரைப்படம் திரையிடப்பட்டது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் சிறந்த படங்களும் உலகின் அனைத்து பாகங்களிலிருந்தும் பல படங்களும் விழாவில் கலந்து கொண்டன. பல முக்கியமான பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டனர். குறிப்பாக காந்திபடத்தில் **காந்தி**யாக நடித்த **பென்கிங்ஸ்லி**, தமிழகத்திலிருந்து கமலஹாசன், ரேவதி, ரோகினி, யூகிசேது A.V.M. சரவணன் மற்றும் பலர்.

மெட்ரோ, ஸ்டெர்லிங், நியூ எக்ஸல்ஸர், டாடா, டாடா லிட்டில், சவான் சென்டர் என பம்பாய் நகரின் முக்கியமான திரையரங்குகளில் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. பலதரப்பட்ட படங்களும் மக்களை கவர்ந்தன.

Silence of Palace, Rice People போன்ற படங்கள் இதயத்தைதொடும் வண்ணம் அமைந்தன. Gold Hungry என்ற French திரைப்படம் அனைவரையும் வயிறு குலுங்க சிரிக்க வைத்தது once were warriors என்ற திரைப்படம் அனைவரையும் கவர்ந்தது.

ஹாலிவுட் புகழ் Arnold நடித்த Truelies திரைப்படம் பிரமிப்பை ஏற்படுத்தியது. மணியால் இயக்கத்தில் ஒரு சிறு படம் Eratic Tales என்ற தொகுப்பில் இடம் பெற்றது. Three colour Red, White, Blue ஆகிய திரைப்படங்கள் அனைவரையும் கவர்ந்தன. Serial mom வித்தியாசமான முறையில் கையாளப்பட்டிருந்தது. The Browning version என்ற திரைப்படம் மென்மையாக கையாளப்பட்டு இருந்தது. Death and Maiden என்ற Romen Polanskiயின் திரைப்படம் வித்தியாசமாகவும், விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது. Fedrico Feliniயின் திரைப்படங்கள் சிறப்பாக திரையிடப்பட்டன குறிப்பாக The Road. இந்தியாவின் சிறந்த இயக்குனர்களின் திரைப்படங்களும் திரையிடப்பட்டன. Main Stream என்ற கமர்ஷியல் படங்கள் வரிசையில் மகளிர் மட்டும், கிழக்கு சீமையிலே ஆகிய தமிழ்படங்கள் கலந்து கொண்டன. நிறைவு விழா திரைப்படமாக ஸ்டீபன் ஸ்பீல்பெர்கின், Shindler's List திரைப்படம் திரையிடப்பட்டது. இந்த திரைப்படம் அனைவர் மனதிலும் நீங்காத இடம் பெற்றது.

நம் திரையரங்குகளில் காண இயலாத பல திரைப்படங்களையும்அங்கு காணமுடிந்தது. பலதரப்பட்ட பகுதியை சேர்ந்த மக்களின்சிந்தனைகள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ள இந்த திரைப்படவிழா ஒரு உறுதுணையாக அமைந்தது.

*Best compliments from*

***K.T. Kunjumons***

**GENTLEMAN FILM INTERNATIONAL**

1/1, Ashok Avenue,
Kodambakkam,
Madras - 24.
Ph : 484 0067, 483 8978

# அகத்திலிருந்து ....

அன்புடையீர்,

ஆன்றோர், சான்றோர், அறிவிற்பெரியோர் மத்தியில், சிறுபிள்ளைத்தனமாய் சிதறிய எழுத்துக்கள்தான் என்றாலும்,சிந்தனையின் பேரில் சிந்தியவை.

ஆம், சாதாரண மனிதனாய், சந்தோசமாய், ஒரு சதைப்பிண்டமாய் சலனமற்று இருப்பதைவிட, சங்கடங்களுக்கிடையில் வாழ்ந்து சாதனையாளனாக வேண்டும் என்று கருத்து என்சிந்தையை சுற்றுகிறது சிகப்பு நிறத்தில்.

இது என் உள் மனத்தில் உருவெடுத்து, உதடுகளில் உச்சரிக்கப்பட்டு, உள்ளங்கையின் வழியே உதிர்ந்தவை, இங்கு உதாசீனங்களுக்கு உரிமையுண்டு, உண்மையல்லவா? ஏனெனில், ஏமாற்றங்களும், ஏளனங்களும்தான் என்னைப் பொறுத்தவரையில் ஏணிப்படிகள்,

சாதனை என்ற சொல்லை ஜெபித்து பார்க்கிறேன், வேதனை என்ற சொல் வேரறுத்து போகின்றது.

மழலை பருவமே மாறாத வயதில் மயிர்கூச்செறியும் சாதனை படைத்தவர் மத்தியில், சிலர் சாகும் வயதில் கூட சாதிக்கவில்லையே என வருந்துகிறேன், சிலர் தனது சந்ததிகளைப் பெறுக்கி சாதித்து விட்டேன் என்றனர் ; சாதனை அதுவல்ல.



உதித்தோம், உண்டோம், உறங்கினோம், உயிர்ப்பித்தோம் என்பதற்கில்லை இவ்வுலகத் தாரின் வாழ்க்கை. அதற்குதான் ஆயிரம் ஜீவன்கள் இருக்கின்றனவே! நீ அஃறினையல்ல உழைக்கப் பிறந்த உயர்திணையைச் சேர்ந்தவன். உலகத்தில் உன் பெயரை உயரச் செய்ய பிறந்த உன்னத பிறவி நீ!

இரவு பகல் பாராது, உன் முன்னேற்றப் பாதையில் மண்டிக்கிடக்கும் முட்களையும், தடைக் கற்களையும், படிக்கட்டுகளாகபாவித்து பணி செய்யப் பிறந்தவன் நீ!

சடங்குகள், சகுனங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் உன்னை சலனப்படுத்தலாம்; ஆனால் சாவைக் கண்டே அஞ்சாத அவைகள் உன்னை என்ன செய்ய முடியும்?

இறுதியாய்.....

மனிதனின் மரணத்திற்கு பின்பு இடுகாடு செல்ல தென்னக்கீற்றிலான பாடை செய்யப்டுகின்றது, ஏனெனில், தென்னையின் ஒவ்வொருகீற்றும் காய்ந்து, மட்டையாகி, மரத்திலிருந்து உதிர்ந்தபின்பும் அது இருந்ததற்கான அடையாளம் மரத்தில் இருக்கும். என்னை சிலிர்க்கக செய்த தத்துவம் இதுதான். மனிதனின் மரணத்திற்கு பின்பும் அவன் பெயர் இந்நிலவுலகில் காலத்தால் அழியாமல் நிலைத்திருக்க வேண்டும். ஜெனிக்கப் போகும் ஒவ்வொரு உயிர்களும் நம் பெயரை உச்சரிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

என்னை பொறுத்த வரையில் வாழ்க்கைக்கு இன்னொரு பெயர் என்று சொன்னால் உறுதியாக சொல்வேன் அது "**தன்னம்பிக்கை**".

தன்னம்பிக்கையில் இரும்பு போன்ற உறுதியோடு அசைக்க முடியாத நம்பிக்கை வையுங்கள் சகோதரர்களே! நிச்சயம் நம்மால் சாதிக்க முடியும்

சாதிக்க ஜனித்த,
**சோம. சுந்தர வடிவேலு.**
முதலாண்டு படத்தொகுப்பு


# ANAND STUDIOS

**(ANAND HOUSE)**

35mm FILM MULTITRACK RECORDING THEATRE FOR DUBBING, RE-RECORDING AND MIXING

**KRISHNA VIDEOS** (AIR-CONDITIONED)

U-MATIC DUBBING & EDITING
HIGH BAND AND LOW BAND

CONTACT FOR BOOKINGS : PHONE 8251238/8265481

**ANAND STUDIOS/KRISHNA VIDEOS**
NO.8, B.N. ROAD,
T. NAGAR, MADRAS - 600 017.

*with Best Compliments From*

**SWASTIK**
**VIDEO VISION**

VIDEO & AUDIO COPYRIGHTS
OWNER OF FEATURE FILM

"HIGH TOWERS"
40-A, NUNGAMBAKKAM HIGH ROAD,
(OPP. TO HOTEL GANPAT), MADRAS - 34.
PH : 8251104

THE LARGEST SHOWROOM IN THE CITY
WERE CASSETTES ARE AVAILABLE IN ALL LANGUAGES
(VIZ) TAMIL, ENGLISH, HINDI, TELUGU & MALAYALAM,
PRE. RECORDED ORIGINAL VIDEO AND AUDIO CASSETTES.

*The Young Ones grow under the care of the Mother*
*Your money grow under the care of TNSC Bank*

***Save your money with us***
***and***
***Watch it grow like a Banyan tree.***

**TNSC BANK**

Please contact :

**THE TAMIL NADU STATE APEX CO-OP. BANK LTD.,**
233, N.S.C. Bose Road, MADRAS - 600 001.
Phone : 5340301 - 304
(or)
Any of its 40 Branches in Madras City.

A BANK ALWAYS AT YOUR SERVICE

## OSCAR AWARDS

# BEST DIRECTOR & BEST FILM

**- S. Ravi Bhernad. B.A.,**
IIIyr Direction

| | | |
|---|---|---|
| 1927 - 28 | - | Frank Borzage for "SEVENTH HEAVEN" |
| 1928 - 29 | - | Frank Lloyd for "THE DRIVE LADY" |
| 1929 - 30 | - | Lewis Milestone for "ALL QUIET ON THE WESTERN FRONT" |
| 1930 - 31 | - | Norman Taurog for 'SKIPPY" |
| 1931 - 32 | - | Frank Borzage for "BAD GIRL" |
| 1932 - 33 | - | Frank Lloyd for "CAVAL CADE" |
| 1933 - 34 | - | Frank Capra for "IT HAPPENED ONE NIGHT" |
| 1935 | - | John Ford for "THE INFORMER" |
| 1936 | - | Frank Capra for "MR. DEEDS GOES TO TOWN" |
| 1937 | - | Leo Mccarey for "THE AWFUL TRUTH" |
| 1938 | - | Frank Capra for "YOU CAN'T TAKE IT WITH YOU" |
| 1939 | - | Victor Fleming for "GONE WITH THE WIND" |
| 1940 | - | John Ford for "THE GRAPES OF WRATH" |
| 1941 | - | John Ford for "HOW GREEN WAS MY VALLEY" |
| 1942 | - | William Wyler for "MRS. MINIVER" |
| 1943 | - | Michael Curtiz for "CASABLANCA" |
| 1944 | - | Leo Mccraey for :"GOING MY WAY" |
| 1945 | - | Billy Wilder for "THE LOST WEEKEND" |
| 1946 | - | William Wyler for "THE BEST YEARS OF OUR LIVES" |
| 1947 | - | Elia Kazan for "GENTLEMAN'S AGREEMENT" |
| 1948 | - | John Huston for "TREASURE OF THE SIERRA MADRE" |
| 1949 | - | Joseph L. Mankeiwicz for "A LETTER TO THREE WIVES" |
| 1950 | - | Joseph L. Mankiewicz for "ALL ABOUT EVE' |
| 1951 | - | George Stevens for "A PLACE IN THE SUN" |
| 1952 | - | John Ford for "THE QUIET MAN" |
| 1953 | - | Fred Zinnemann for "FROM HERE TO ETERNITY" |
| 1954 | - | Elia Kazan for "ON THE WATERFRONT" |
| 1955 | - | Delbert Mann for "MARTY" |
| 1956 | - | George Stevens for "GIANT' |

---

- ☆ அதிக செலவில் எடுக்கப்பட்ட முதல் தமிழ்படம் "நந்தனார்".
- ☆ இந்தியாவின் முதல் பேசும்படம் "ஆலம் ஆரா".
- ☆ தமிழின் முதல் பேசும்பட நாயகி டி.பி. ராஜலட்சுமி

1957 - David Lean for "THE BRIDGE ON THE RIVER KWAI"
1958 - Vincente Minnelli for "GIGI"
1959 - William Wyler for "BEN-HUR"
1960 - Billy Wilder for "THE APARTMENT"
1961 - Robert Wise for "WEST SIDE STORY"
1962 - David Lean for "LAWRENCE OF AREBIA"
1963 - Tony Richardson for "TOM JONES"
1964 - George Cuckor for "MY FAIR LADY'
1965 - Robert Wise for "THE SOUND OF MUSIC"
1966 - Fred Zinnemman for "A MAN FOR ALL SEASONS"
1967 - Mike Nichols for "THE GRADUATE"
1968 - Carol Reed for "OLIVER"
1969 - John Schlesinger for "MIDNIGHT COWBOY"
1970 - Franklin J.Schaffner for "PATTON"
1971 - William Friedkin for "THE FRENCH CONNECTION"
1972 - Bob Fosse for "CABARET"
1973 - George Royhill for "THE STING"
1974 - Francis Ford Coppola for "THE GODFAHTER, PART II"
1975 - Milos Forman for "ONE FLEW OVER THE CUCKOO'S - NEST"
1976 - John G.Avildsen for "ROCKY"
1977 - Woody Allen for "ANNIE HALL"
1978 - Michale Cimino for 'THE DEE HUNTER"
1979 - Robert Benton for "KRAMER VS KRAMER'
1980 - Robert Redford for "ORDINARY PEOPLE"
1981 - Warren Beatty for "REDS"
1982 - Richard Attenborough for "GANDHI"
1983 - James L.Brooks for "TERMS OF ENDEARMENT"
1984 - Milos Forman for "AMADEVS"
1985 - Sydney Pollack for "OUT OF AFRICA"
1986 - Oliver Stone for "PLATOON"
1987 - Bernardo Bertolucci for "THE LAST EMPEROR"
1988 -- Barry levinson for "RAIN MAN"
1989 - Oliver Stone for "BORN ON THE FOURTH OF JULY"
1990 - Kevin Costner for "DANCES WITH WOLVES"
1991 - Jonathan Demme for "THE SILENCE OF THE LAMBS"
1992 - Clint Eastwood for 'UNFORGIVEN"
1993 - Steven Spielberg for "SCHINDLER'S LIST"
1994 - "FOREST CAMP"

**Our best wishes on the**

# THIRTY FIRST ANNIVERSARY

**of**

# FILM AND TV INSTITUTE

| | |
|---|---|
| FILM CITY | A Paradise for Film and Video Producers and Directors |
| FILM CITY | A Paradise for young and old at Amusement Park |
| FILM CITY | A Paradise for children at children's Play Area |
| FILM CITY | A Paradise for Tourists and the Public |
| FILM CITY | Yes.. We do not exaggerate. Seeing is believing. Come and see. You will believe it |

# J. JAYALALITHA FILM CITY

**TARAMANI,**
**MADRAS - 600 113**

Issues by : Tamil Nadu Film Development Corporation Limited

*With best compliments from*



# TY DIAN MARKETING

18, RAMANUJA NAGAR,
AYANAVARAM, MADRAS - 600 023.
PH : 614237

# இலக்கியப்பாடல்கள்

**ஜவஹர்**

முதலாம் ஆண்டு இயக்கம்



தமிழ் திரைப்படப்பாடல்கள் இலக்கிய அந்தஸ்தை பெற்றுவிட்டது என்று ஒரு பிரிவினரும், இலக்கிய அந்தஸ்தை பெறவில்லை என்று மற்றொரு பிரிவினருக்குமிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. ஆனால் பொதுப் படையாக திரைப்படப்பாடல்களை ஆராய்ந்துப் பார்க்கும் பொழுது எல்லா திரைப்படப்பாடல்களும் இலக்கியமாகும் என்பது உண்மையுமல்ல. திரைப்படப்பாடல்கள் இலக்கிய மயமாகாது என்பது ஆரோக்கியமுமல்ல.

மேலெழுந்தவாரியாகப் பார்க்காமல், எவ்வாறு திரைப்படப்பாடல்கள் இலக்கிய அந்தஸ்தை பெறமுடியும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதலில் இலக்கியம் என்றால் என்ன? திரைப்படப்பாடல்கள் இலக்கிய நிலையை எப்போது அடையும் என்பதையும் இங்கே ஆராய வேண்டும்.

இலக்கியம் என்பது ஒரு கவிஞனோ அல்லது புலவனோதான் மக்களுக்கு கூற நினைக்கும் கருத்தை ஒரு பாடுபொருள் மூலமாக எடுத்துக்கூறுவதே இலக்கியமாகும். அந்த பாடுபொருள் உணர்ச்சியுடையதாகவும், கற்பனை செறிந்ததாகவும், கருத்துமிக்கதாகவும், ஒரு வடிவம் உடையதாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு உணர்ச்சி, வடிவம், கற்பனை, கருத்து என்ற இந்த இலக்கியத்தின் கூறுகளை திரைப்படப்பாடல்கள் பெறும்போது அது இலக்கிய அந்தஸ்தை பெறமுடிகிறது.

தமிழ் திரைப்படக் கவிஞர்கள் தங்களது கற்பனையையும், திறமையையும் பாடுபொருள் மூலமாக ஒவ்வொரு நிலையிலும் நிரூபித்துள்ளனர். காலத்தால் அழிக்கமுடியாத காவியப்பாடல்களை வெள்ளித் திரைக்கு வழங்கிச்சென்ற கவியரசு கண்ணதாசன் காலத்திலேயே தமிழ் திரைப்படப்பாடல்கள் இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுவிட்டது. அவர் மறைந்துவிட்டடாலும் இவருடைய எண்ணச் சிதறல்களை இன்று எத்தனை உள்ளங்களும், உதடுகளும் ஸப்தரித்துக் கொண்டிருக்கின்றது. அன்று கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் முதல் இன்று வாலி, வைரமுத்து வரை அனைவரும் தமிழ் திரைப்படப்பாடலின் முன்னேற்றத்திற்கான சான்றுகளாவர்.

இவர்கள் தங்களுடைய எண்ணங்களையும், கற்பனைகளையும் ஒவ்வொரு மனித நிலையிலும் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றனர்;

---

★ ஆங்கிலப் பெயருடன் வெளிவந்த முதல் தமிழ்படம் ***"Madras Mail" (1936)***

★ வெளிநாட்டு இயக்குனரான எல்லிஸ். ஆர்.டங்கன் இயக்கிய முதல்தமிழ்படம் ***"சதிலீலாவதி". (1936)***

தலைவன் தலைவியைப்பார்த்து பாடுகிறான்.

"உன்னை நான் பார்க்கும்போது மண்ணை நீ பார்க்கின்றாயே!
உன் கண்ணை நான் பார்க்கும்போது விண்ணை நீபார்க்கின்றாயே!
நேரிலே பார்த்தால் என்ன நிலவென்ன தேய்ந்தாபோகும்."

ஓர் அழகான பெண்ணை மணந்த ஊனமுற்ற கணவன், முதலிரவில் மனைவியிடம் கேட்கிறான் கைவிளங்காத என்னை ஏன் விரும்பி மணந்து கொண்டாய் என்னால் உனக்கு என்ன இன்பம் கிடைக்கப்போகிறது என்று. அதற்கு மனைவி கணவனைப் பார்த்துபாடுகிறாள்.

"தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ!
உங்கள் அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அன்பு குறைவதுண்டோ!
சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ!
உந்தன் சிந்தையும் செயலும் ஒன்றுபட்டாலே மாற்றம் காண்பதுண்டோ.

மேலும்,

"கால்கள் இல்லாம் வெண்மதி வானில் தவழ்ந்து வரவில்லையா!
இரு கைகள் இல்லாமல் மலர்களை அணைத்து காதல் தரவில்லையா?

என்று மனைவியின் அன்பை கவிஞர் அழகாக பாடியுள்ளார்.

இறக்கும் நிலையில் இருக்கும் கணவன் இன்னொருவனிடம் தன்மனைவியை தான் இறந்த பின்பு திருமணம் செய்துக்கொள்ளும்படி கேட்பதை பார்த்துவிட்ட மனைவி கணவனை நோக்கிபாடுகிறாள்;

"தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை தெருவினிலே விழலாமா!
தெருவினிலே விழுந்தாலும் வேறு ஒரு கை படலாமா!
ஒரு கொடியில் ஒரு முறைதான் மலரும் மல்ரல்லவா!
ஒரு மனதில் ஒரு முறைதான் வளரும் உறவல்லவா!!

இந்த பாடலில் கணவனை தெய்வத்திற்கு ஒப்பிட்டு, எக்காரணத்தினாலும் தெய்வத்திற்கு சூடிய மாலை தெருவினிலே விழக்கூடாது. அவ்வாறு அது விழுந்துவிட்டால்கூட அதன்மேல் இன்னொருவன் கை படலாமா என்றும், கணவன் என்ற உறவு ஒரு முறைதான் ஏற்கும் பெண் இனத்தைச் சேர்ந்த மலரல்லவா நான் என்று கவிஞர் ஒரு மனைவியின் ஸ்தானத்தில் அவளுடைய உள்ளுணர்ச்சிகளை கருத்துமிக்கதாகவும், உணர்ச்சி மிக்கதாகவும் பாடியுள்ளார்.

மேலும்,

தனக்கு பெண் குழந்தை பிறந்துவிட்டதை அறிந்த தந்தை, குழந்தையை கள்ளிப்பால் ஊற்றி கொன்றுவிடும்படி உத்தரவிடுகிறான். அந்த குழந்தையை கொல்லப்போகும் சூழ்நிலையில் பிறந்த குழந்தைக்கு பாடவேண்டிய தாலாட்டு பாடலையே ஒப்பாரிபாடலாக கவிஞர் பாடியுள்ளார்;

---

- ✯ TRUE COLOUR முறையில் தயாரிக்கப்பட்ட தமிழ்படம் "ராஜ துரோகி".
- ✯ முதன் முறையாக தமிழ் டப்பிங் குரல் முறையை பின்பற்றிய படம் "சாந்த சக்குபாய்"

"ஆராரோ நீ கேட்க ஆயிசு உனக்கில்லையடி
விதை நெல்லு நான் கொடுக்க விதி வந்து சேர்ந்ததடி
தாய்பாலு நீ குடிக்க தலையெழுத்து இல்லையடி
கள்ளிபாலு நீ குடிச்சு கண்ணுறங்கு அன்னக்கிளி
அடுத்து ஒரு ஜென்மம் வநது ஆனாக நீ பொறந்தா
பூமியில் இடமிருக்கும் போய்வாடி அன்னக்கிளி"

என்று பாடிக்கொண்டே கள்ளிபாலை குழந்தை வாயில் ஊற்றுவதைக்கண்டு நெகிழாத நெஞ்சங்கள் இருந்திருக்க முடியாது.

தாய்பாசத்தை பாடாத கவிஞர்களே இல்லை ஒவ்வொரு நிலையிலும் தாயின் அன்பை உணர்ச்சிமயமாக சித்தரித்துள்ளனர்.

"பசுந்தங்கம்; புதுவெள்ளி; மாணிக்க மணிவைரம்;
அவையாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா
விலைமீது விலைவைத்து கேட்டாலும் கொடுத்தாலும்
கடைதன்னில் தாயன்பு கிடைக்காதம்மா!
பொருளோடு புகழ்வேண்டும் மகனல்ல தாயே - உன்
அருள் வேண்டும் எனக்கென்றும் அது போதுமே
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் நான் உந்தன்
மகனாக பிறக்கின்ற வரம் வேண்டுமே - அதை நீயே தருவாயே

என்றும்,

"திட்டி திட்டி பேசினாலும் வட்டியில்ல சோறுவைப்பா,
ஒட்டிப்போன உடம்பானாலும் உசுறவிட்டு பாசம் வைப்பா
தின்னவாயில் திட்டினாலும் என்னை அவ நொந்ததில்லை
கந்தல் துணி, கட்டினாலும் கண் கசங்க பார்த்ததில்லை.

என்றும்,

"அன்னம் போட்ட தாயே உனக்கு அரிசி போட
வந்தேன், என்னை நானே நொந்தேன்"

என்றும்,

"புத்திமதி சொல்லையில தட்டிச்சென்ற பாவியடி
விட்டுவிட்டுப்போன பின்னே வேகுது என் ஆவியடி
நோயாளே நான் படுத்தா நோன்பிருக்கும் ஆத்தா
தீ மூண்டு தீர்ந்திடுமா நம் கணக்கு ஆத்தா

என்றும், இறந்து விட்ட தாயை எண்ணி பாடும் மகனின் ஓலக்குரல்களை உயிரோட்டமாக்கி இருக்கின்றார்கள் கவிஞர்கள்.

☆ தியாகராஜ பாகவதர் அறிமுகமான படம் "பவளக்கொடி" அதில்அவர் வாங்கிய சம்பளம் ஆயிரம் ரூபாய், அதை இயக்கிய இயக்குனர் K. சுப்ரமணியம் பெற்ற ஊதியம் 750 ரூபாய்.

இயற்கையை வர்ணித்து பாடும்பொழுது

"முகிலினங்கள் அலைகிறதே முகவரிகள் தொலைந்தனவோ
முகவரிகள் தவறியதால் அழுதிடுமோ அது மழையே"

"நீ அணைக்கின்ற வேலையில் உயிர்பூ
திடுக்கென்று மலரும்
நீ வெடுக்கென்று ஓடினால் உயிர் பூ
சருகாக உளரும்"

என்று கணவனும் மனைவியும் தங்களுடைய அக இன்பங்களை பகிர்ந்து கொள்ளும் உணர்ச்சியை கவிஞர் அழகாக பாடியுள்ளார்.

இவ்வாறு, இங்கு உதாரணங்களாக எடுத்துக்கொண்ட பாடல்கள் அனைத்தும் ஒரு சிறுதுளியே இலக்கியத்தின் திரைப்படபாடல்கள் இடம்பெற்றுவிட்டன என்பதற்கு இந்தப் பாடல்கள் சான்றுகளாகும். எனவே எல்லா திரைப்படப்பாடல்களும் இலக்கியமும் அல்ல. இலக்கியமாக்கப்பட்ட திரைப்படப்பாடல்களும் இருக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.


EDIT POINT
- CORPORATION -
240, Lloyds Road, Raj Complex, IInd Floor,
Madras 600 086. Tel : 8265955/8269885

| | |
|---|---|
| SPECIAL EFFECTS IN 35 MM & VIDEO, COMPUTER GRAPHICS, 3D ANIMATION | |
| | BETACAM, (A/B ROLL) HIGH BANK (A/B ROLL) EDITING SYSTEMS WITH SDVE AVID NON-LINEAR EDITING |
| CHROMAKEY STUDIO WITH IN-HOUSE CAMERA TITLING IN TAMIL, ENGLISH, MALAYALAM | |
| | SILICON GRAPHICS SYSTEM, WITH DIGITAL FILM RECORDER & DIGITAL DISK RECORDER |
| MANY YEARS OF EXPERIENCE IN EDITING, SPECIAL EFFECTS WITH PROVEN TRACK RECORD | |


☆ C. புல்லையா இயக்கிய "பக்தமார்கண்டேயா" (1925) படத்திற்குபயன்படுத்திய பழைய கேமிராவை அவர் அக்காலத்தில் ரூ.156 கொடுத்து வாங்கியிருக்கிறார். மேலும் அவர் அப்படத்தை புதிய முயற்சியாக திரைக்கு பதிலாக வெண்சுவரில் திரையிட்டார். அந்த சுவர் காகிநாடாவில் உள்ள மினர்வா தியேட்டரில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

*Best wishes from*

# GEMINI PICTURES CIRCUIT
**PVT. LTD.,**

**(COLOUR LABORATORY)**

2, VEMBULI AMMAN KOIL ST.,
VIRUGAMBAKKAM,
MADRAS - 600 092.
✆ : 4838111, 4838938, 421737,
425690, 427848, 4838151

# CONFIDENT

My Dear Youths,

Now we are like dogs strayed into a kitchen and eating a piece of meat looking around in fear lest at any moment someone may come and drive themout. Give up the world and become free. Feel the wonderful atmosphere of freedom, you are free free.

Your senses cheat you day and night. So contrast the organs of the senses and control your mind.

We are what our thoughts have made us. Each thoughts we think is tinged.With our own character So take care of what you think.

It is the mind that makes us happy or unhappy. Things are dead in themselves, only we give them life and then, like foots, we turn around and are afraid of them or enjoy them.

Be mad with joy even at evil, see the world as a picture and enjoy its beauty knowing that nothing affects you. See the good and evil as the same all are merely God's play, enjoy all.

Bear every misery without even knowing that you are miserable. Do not merely endure, be unattached.

Knowledge is life, ignorance is death. Know the truth in a moment all the darkness will then vanish.

Desire nothing, think of God and look for no return.

Work hard, work incessantry. Let the brain centres work, but let not the mind be affected.

They alone like who like for others, the rest are more dead than alike

Arise,

Awake,

And stop not till the goal is reached.

By,
**Swami Vivekananda**

***N. KARTHIKEYAN,***
Ist SR & SE

---

★ வெனிஸ் திரைப்படவிழாவில் கலந்து கொண்டு விருதுபெற்ற முதல்இந்தியப்படம் 1936–ல் வெளியான திரு. சாந்தாராம் இயக்கிய SantTukaram.

# நண்பனே

இதயத்தின் அடித்தளத்தில் உன்னால்
இதமாய் எப்படி நுழைய முடிகின்றது
வார்த்தைகளுக்கு கூட ஒத்தடம் கொடுக்க
எங்கு கற்றாய் நண்பா!
மனக் கூண்டுக்குள் சிலிர்த்திடும்
எண்ணங்களை எழுத்து வடிவாய்
உருமாற்ற முதன் முறையாய்
என் பேனா முனையில் ஒரு தயக்கம்
என்ன எழுதுவது?
என் எண்ணங்களை
சில வார்த்தைகளுக்குள் அடக்குவதில்
எனக்கு உடன்பாடில்லை நண்பனே!
நண்பா யோசி!
எதை பகிர்ந்திடுவாய் நட்புக்கு இலக்கணமாய்
அதோ! அவ்வெற்றிடத்தை உற்று நோக்கு,
நான் வெளிப்படுத்த நினைப்பதெல்லாம்
அங்கொரு காற்று மண்டலத்தை .....
ஆம் நண்பா!......
உன் நட்பு எனக்கொரு வரப்பிரசாதம்.



– நட்புடன் –
**சே.கி. தமிழ்க்குமணன்**
(இரண்டாமாண்டு படத்தொகுப்பு)

---

## — ஏழையின் கூக்குரல் —

ஓ! பெண்மணிகளே
ஈரத்துணியை ஏன்
கடினப்பட்டு
உலர்த்துகிறீர்கள்?
எங்களிடம்
கொடுங்கள்.
வயிற்றுக்கு
ஆடையாக்கி
பசியைப்
போக்கிக் கொள்கிறோம்.

- **வெ. விசுவேசரய்யா** –
(முதலாண்டு படப்பதனிடுதல்)

---

★ முதல் தமிழ் பேசும்படம் சென்னையில் "கினிமா சென்டிரல்" என்றதியேட்டரில் திரையிடப்பட்டது.

★ காடுகளில் முதன் முதலில் படமாக்கப்பட்ட தமிழ் திரைப்படம்"வனராஜாடார்ஜான்".

*With best compliments*

*of*

**CENTURY FLOUR MILLS LIMITED**

Manufacturers of

**RESING SUN BRAND**

**Superior Quality**

**MAIDA, SOOJI & ATTA**

(Also available in 1 Kg Retail Packets at all leading stores)

**P. GOVINDASAMY - MANAGING DIRECTOR**

**G. RAVINDRAN - JT. MANAGING DIRECTOR**

Regd. Office
Indian Chamber Buildings
First Floor, Esplanade,
MADRAS - 600 108
Tel. No. 5342042/44
Telex No. 41 8118 CFM IN
Fax No.044-5340677

Mills :
No.2, Tank Bund Road,
Otteri, Perambur,
MADRAS 600 012
Tel. No. 6421701/6422579

CHENNAI FOUNDATION

PRIVATE LIMITED

**BUILDERS & PROMOTERS**




**THIRU COMPLEX, II FLOOR**
**44 & 45, PANTHEON ROAD,**
**MADRAS - 600 008.**
**✆ : 8256553, 8252796, 8284439**

# எங்கும் D.F.T. என்பதே பேச்சு

**V.M. RAVI RAJ**
Direction Dept.

இடம் : **A.V.M. R.R. Theatre,**
நேரம் : காலை 9.00 மணி

ஒரு திரைப்படத்தின் பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்க.... திரையுலகின் பிரபலங்களும், பிரபலங்கள் ஆகத் துடிப்பவர்களும் அங்கு நிறைந்திருந்தனர். ஒதுங்கி நின்றதொரு ஒரு கூட்டத்தில் இருந்த நண்பனிடம் அளவளாவ நெருங்கினேன். அருகில் நின்ற ஒரு இளைஞனை அறிமுகப் படுத்தி வைத்து, "இவரும் D.F.T. தான், என்றார்! அவரை நோக்கினேன். பல ஆண்டுகள் திரைப்படக்கல்லூரியில் பணியாற்றுவதால் அந்த முகத்தை அடையாளம் கண்டுகொள்ள முயன்றேன். தோல்வியடைந்தேன். எந்த பேட்ச்? அந்த இளைஞன் மிகவும் நிதானமாக "1980 பேட்ச்". என் முகம் ஆச்சரியத்தில் முழ்கியது, "நானும் 1980 பேட்ச்தான் என்றேன். நீங்க எந்த Diploma Unit என்று நான் கேட்க...... அவர் முகம் இருண்டது.... நா வறண்டது.... ஆம்..... இன்று நானும் DFT–தான் என தம்பட்டம் அடித்துக் கொண்டு அப்படியாவது திரையுலக வாழ்வில் முன்னேற்றம் ஏற்படாதா? என்று ஏங்கிக் கெண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான இளைஞர்களில் இவரும் ஒருவர்.




எனதருமை மாணவ நண்பர்களே!

Flash Back-ல் 1980க்கு சென்று பார்க்கிறேன் வெளியே வந்த ஐந்து டைரக்ஷன் மாணவர்களும் திரையுலகில் காலடி எடுத்து வைக்கமுயன்ற காலத்தில் D.F.T.–ஐ ஏரெடுத்து கண்டு கொண்டவர்கள் யாருமில்லை.

திரைப்படத்தை பற்றி படித்து வருபவர்கள் ஆர்ட் படம் எடுப்பதற்கும், டாகுமென்ட்ரி படங்கள் எடுப்பதற்கும் தான்லாயக்கு என்ற அன்றைய நிலை மாறி.... இன்று திரையுலகின் ஒவ்வொரு துறையிலும் D.F.T. என்றாகி விட்டது. மிகவும் மகிழ்ச்சியான விசயம்தான். ஆனால், இந்த மரியாதை எப்படிநமக்குக் கிட்டியது?

---

- ☆ முதன் முதலில் ஜனாதிபதி விருதுபெற்ற படம் 'மலைக்கள்ளன்'
- ☆ தமிழ் திரையுலகின் முதல் பெண் இயக்குனர் டி.பி. ராஜலட்சுமி.

இன்று சுதந்திர இந்தியாவில் நாம் நினைத்ததைப் படித்து நினைத்ததுறையைத் தேர்ந்தெடுக்க எப்படி நம்முடைய முன்னோர்கள்சிறையில் துன்புற்றார்களோ அதே போல் இன்று DFT.–க்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தி அதே நேரம் தங்களை வருத்தி வெற்றிகொடி நாட்டியவர்களை நாம் நினைவு கூறுவது மிகவும் அவசியம்.

மிகவும் பாரம்பரியம் மிக்க நம் கல்லூரியிலிருந்து வெளிவந்த அன்றைய மாணவர்களான திரு. அசோக்குமார், திரு. ராபர்ட் ராஜசேகர் போன்றோர் DFT. – ஐ முதன் முறையாக மக்கள்முன் அறிமுகப்படுத்தினர். அதன் பின்னர் திரு. ருத்ரய்யா தன்நண்பர்களுடன் DFT – யின் படம் இது என்ற முத்திரை பதிக்கும் வண்ணம் "அவள் அப்படித்தான்" – கொடுத்தார். பலராலும் பாராட்டப் பட்டாலும் பணம் பண்ணததால் பாதிக்கப்பட்டடது அந்த Unit.. பின்னர் பல ஆண்டுகள் அமைதிக்குப்பின் .... வந்தது ஒரு புதுவெள்ளம். ஆம். ஆபாவாணன் தன் வகுப்பு நண்பர்களுடன் தன் படைப்புகளால் வர்த்தகமும், வித்தகமும் கலந்த படைப்பைகொடுத்து DFT .–ன் பெயரை உயர்த்தினார்.

அவர்கள் வழியிலே தன் தனித்திறமையால் நின்ற இளம் இயக்குநர்களில் முன்னோடி R.K. செல்வமணி, DFT. யின் மதிப்பு மேலும் பல இலட்சங்கள் உயர்ந்தன.

இப்படி நாம் நம் மாணவர்களின் பெருமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே போகலாம். ஆனால், நாம் சற்றே நிதானித்துயோசித்துப் பார்த்தோமே யானால், இந்த மதிப்புக்கும், மரியாதைக்கும் அவர்கள் தங்களுடைய வேர்வையையும் எவ்வளவு சிந்தியிருப்பார்கள் என்று நினைவு கூற வேண்டும்.

இன்று இன்னும் ஆயிரம் சாதனைகள் படைக்க இந்த மாபெரும் திரையுலகம் உங்களை எதிர் நோக்கியிருக்கின்றது. நாம் நம் முந்தையவர்கள் நட்ட மரத்திலே இளைப்பாறுவதை விட்டுவிட்டு நம்மால் இயன்ற அளவு மரம் நட வேண்டும். உண்மையான உழைப்பை செலுத்தி திரைப்படக் கல்லூரியில் இருக்கும் இந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு நாளையும், பயனுள்ளதாக ஆக்கி, பாடத்திட்டம் மட்டுமே படிப்பாகிவிடாது என்பதனை உணர்ந்துமேலும் மேலும் உங்கள் கலையுணர்வை தொழில்நுட்ப அறிவைவளர்க்கும் வண்ணம் அறிவை தேடிச் சென்று புதுமைகள் பலபடைத்து நீங்களும் உயர்ந்து உங்கள் மூலம் DFT ன் புகழை மேலும் உயர்த்துவீர்கள் என்று இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
**V.M. ரவிராஜ்**

---

★ *அதிக சம்பளம் வாங்கிய முதல் தமிழ் நடிகை K.B. சுந்தராம்பாள் (1 லட்சம்) (படம் : ஔவையார்)*

★ *முதல் தமிழ்படமான "காளிதாஸ்" பம்பாய் இம்பீரியல் பிலிம் கம்பெனியால் தயாரிக்கப்பட்டது.*

**With Best Compliments from :**

## HINDUSTAN INSTITUE OF ENGINEERING TECHNOLOGY

## HINDUSTAN COLLEGE OF ENGINEERING

## N.I.E.T COMPUTER ACADEMY

## ORIENT FLIGHT SCHOOL



ADMINISTRATIVE OFFICE :

P.B. No.1306, 40, GST Road, St. Thomas Mount,
Madras - 600 016.
Phone : 2341389 & 2342508.
Fax : 044-2342170, Grams : 'ELLFIVE'

# வெற்றி – நான் பேசுகிறேன்

வெண்திரையில் சிலைவடிக்க, வேட்கையொடு
நடைபோடும்,
"காவிய" வீரர்களே! கொஞ்சம் திரும்பிப்
பாருங்கள்,

கொஞ்சி விளையாடும் குழந்தைப் பருவம் முதல்,
கூத்தாடி, சீராட்டும், இளவயது வரை,
எண்ணிப்பாருங்கள் நம் பெற்றோரை

கண்ணீர் விட்டு, க டப்பட்டு
உடலாகிய உன் சிலைக்கு
உயிர்க்கொடுக்கும் உத்தமரை
எண்ணிப் பாருங்கள்.

வற்றாத கடலும் வற்றிவிடலாம்,
பெய்கின்ற மழையும் பொய்த்துவிடலாம்,
காணும் செழுமைகள் மறைந்துவிடலாம்,
மனிதனே! கலையுலக மைந்தனே! – உன்
காவியங்கள் என்றும் அழிவதில்லை.
காலம் தொடர்ந்து காட்டும்படி – உன்
கலைப்பணியை தொடர்வாய்.

அதோ பார்; உன் வரவை எண்ணி
கேமிராக்கள் கண்சிமிட்டுகின்றன – உன்
சிந்தனைகளை திரை சிற்பமாக்க,
வாழ்வளிக்க, வண்ண விளக்குகள்
காத்திருக்கின்றன.
இவ்வுலகில், உன்னதமான
இடம் பிடிக்க, ஓடிவாருங்கள்
"வெற்றி - நான் காத்திருக்கிறேன்!

**M. தண்டபாணி**
நடிப்புத்துறை


*With Best Compliments from*



**M/S.BHARGAV ART PRODUCTIONS**

28, VIVEKANANDA STREET,
T. NAGAR, MADRAS 600 017

# என் இனிய கல்லூரியே !....

கண்ணே! கனியமுதே!
கலையை வளர்க்கும் கலைமகளே!
திரைக்கல்வியை,
திரையொழுக்கத்தை
தேனாய் செவிக்கீந்திய தேன்கூடே!
1946–ம் ஆண்டுதொற்று இன்றுவரை
துள்ளும் புள்ளிமானாய் – எமக்கு
புத்துணர்வூட்டிய கல்லூரியே!
என்ன சொல்லிப் போற்றுவேன் – உன்னை.

இங்கு
கண்களாக மாணாக்கர்கள்,
இமைகளாய் ஆசிரியர்கள்,
உண்மைதான்
இமைகளின் அரவணைப்பில்தான்
கண்கள் – இங்கு.

மழை பொழிய வானம் – மறக்கலாம்
ஊற்று விட பூமி – மறக்கலாம்
தென்றல் வீசிட அந்திமாலை – மறக்கலாம்
மணம் வீசிட மலர்கள் – மறக்கலாம்
கனியாக மாறிட காய் – மறக்கலாம்
கதிரொளி வீசிட கதிரவன் – மறக்கலாம்
குளிர்தனை வீசிட நிலவது – மறக்கலாம்
புசிப்பதை கூட நான் – மறக்கலாம்
கல்லூரியே!
கலைத்தாயே!
**உன்னை நான் மறக்க முடியுமா?**
மறந்தால்
**நான் மனிதனாக முடியுமா?**

**சி. இராமச்சந்திரன்,** B.Com.,
முதலாண்டு படத்தொகுப்பு

☆ **30** லட்ச ரூபாயில் **3½** வருட உழைப்பில் உருவானது "சந்திரலேகா". சந்திரலேகா படம் மொத்தம் 609 பிரதிகள் ***(Print)*** போடப்பட்டு உலகம் முழுவதும் வெளியிடப்பட்டது.

# நானே சினிமா கலைஞன்



முடிவில்லா பாதையில் முன்னோக்கி செல்கிறேன் நான்
கடந்து வந்த பாதை இருளாய் இருக்க
விடியலை நோக்கி விரைந்துசெல்கிறேன் – நான்
வானத்து நிலவாய் ஒளிவீசி வந்தவளோ – என்
வாழ்க்கை சுவையின்றி தேய்ந்தே போகிறாள்
என்னோடு வந்தவர்கள் என் அருகில் இல்லை
முன்னேறிச் சென்றவர்கள் முகம் காட்ட வில்லை

என் கற்பனை பூக்களை – விற்பனைக்கு படைக்க
வீதிக்கு வந்தவன் – நான்
வெள்ளித் திரையில் தோன்ற – இன்று
மண்தரையில் மன்றாடுகிறேன்,
நிஜத்தை மறந்து நிழலைப் பார்த்து
ரசிக்கும் **நானே சினிமாக் கலைஞன்.**

**ஸ.சுந்தர வடிவேலு**
இரண்டாமாண்டு படப்பதனிடல்



*With best compliments from*



# KAMAK PLASTICS PVT. LTD.,

PLOT. NO. 12A(SP) INDUSTRIAL ESTATE,
GUINDY,
MADRAS - 600 032,
✆ : 2342895

# ஜெ.ஜெ. படைத்த புதுமை பூமி!

**மதன் கேப்ரியெல்**
நடிப்புத்துறைத் தலைவர்

எனதருமை டி.எப்.டி கலைக்குடும்பக் காளையரே! கன்னியரே!



நான் லயோலா கல்லூரியில் படித்து முடித்தவுடன் திரைக்கலை பயில எண்ணினேன். திரைக்கலைக்கென்று திரைப்படக் கல்லூரி ஒன்று இருப்பதாக அறிந்தேன். அடையாறு வந்து அடைந்தேன். அடையார் வாசிகளும் அப்படி ஒரு கல்லூரி எங்கு இருக்கிறது என்று அறியாது இருந்தார்கள் என்று சொன்னால் உன்னால் நம்பமுடிகிறதா. ஒரு வழியாய் நம் கல்லூரியை அடைந்தேன். நூழைவுத் தேர்வில் மாணவர் கூட்டம் இன்று போல் அல்ல, மிகக்குறைவே. மாணவப் பருவம் முடித்து இன்று என் அருமை மாணாக்கராம் உமக்கு ஆசிரியராய் நிற்கிறேன்.

நம் இளம் திரைச் சிற்பிகள் 'ஊமை விழிகள்' காட்டியவுடன், அனைவரின் விழிகளும் நம்மை ஆட்கொண்டன. கலை ஆர்வம்கொண்ட காளையர் பலர் நம் கல்லூரியை தேடுதல்அதிகமாயிற்று.

இந்நிலையில்.....

கண்ணியம் வாய்ந்த கவின் நாட்டில் எழில் ஆட்சி செய்து வரும் நம் முதல்வரின் ஓர் எளிய விழா! ஆம்.... நம் வளாகத்தில் திரைப்படநகர் அடிக்கள் நாட்டுவிழா! அம்மையாரின் பேச்சைக் கேட்க நம் டி.எப்.டி கலைக் குடும்பத்தினர் ஆவலாய் அமர்ந்திருந்தனர். நானும் அதற்காக அக்கூட்டத்தில் காத்திருந்தேன்.

ஆனால் ஏமாற்றம்.......

ஒன்றும் பேசாமல் அடிக்கல் மட்டும் நாட்டிச் சென்றார். வெறும் வாய்ச் சொல் வீரர்களாகி மக்களை மயக்கும் மக்கள் தலைவர்கள் மத்தியில் நம் முதல்வர் மாறுபட்டு நின்றது என்னை வெகுவாக சிந்திக்க வைத்தது.

மறுநாள்...... வளாகத்தைச் சுற்றி நடந்தேன்......

முட்காடு ஆக்கிரமித்து, நடக்க கூட முடியாத பெரும்பகுதி – பாம்புகளுக்கு பயந்து கால் மாற்றி நடக்கக்கூட அஞ்சும் நம் மாணவர் – நிழற்படம் எடுக்கக்கூட ஒரு செடியும் இல்லாத பொட்டல் பகுதி – வகுப்பறை படப்பிடிப்புக் கூட நடத்த முடியாத சுற்றுப்புறம் – அதனால் வெளியாரிடம் இறைஞ்சி இடம் கேட்க வேண்டிய அவலநிலை.

---

- ★ முதல் டெக்னிகல் வண்ணத்திரைப்படம் - வீரபாண்டிய கட்டபொம்மன்
- ★ முதல் முதலில் வெளிநாட்டில் எடுத்தபடம் - நவயுகன்
- ★ முதன் முதலில் மினியேச்சர் முறையில் பின்பற்றிய படம் சுந்தரமூர்த்தி நாயானர் (1933

முன்னேறி வரும் தொழில் நுட்பத்தில் நமக்கு முட்டுக் கட்டையாய் கலைக் கருவிகளின் குறைபாடு – அத்திப் பூத்தார்ப்போல் எப்போதோ ஒரு முறை வெளியார் வந்து நம்மிடையே நடத்தும் படப்பிடிப்பு – அதுவும் மருத்துவமனைக் காட்சிக்காக மட்டுமே நம் வருப்பறைகள் ஆக்ரமிப்பு.

இந்நிலையில்தான்......

சென்ற ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31–ம் நாள்

நிமிர்ந்த நன்நடையுடன், நேர்கொண்ட பார்வையுடன், அஞ்சாநன்நெறியுடன் சாதனை வீராங்கனையாக, தரணி போற்றும்திரைப்பட நகர் திறந்து வைத்து திருவுரையாற்றினார் நம்முதல்வர்.

இன்று ....... நம்மைச் சுற்றி......

உலகெங்கிலும் உள்ள அனைத்து பசுமையும் அதனால் மலைகளின்அரசியாம் ஊட்டியின் குளுமையும் பல நாட்டு நந்த வன அமைப்புகளும், பலவித கலாச்சாரத்திற்கும் மதங்களுக்கும் ஏற்றார் போன்றதொரு பெரும் கிராமமும் – ஏரி, குளம், நீரோடை, நீச்சல் குளம் என பல்வேறு நீர் நிலை இயற்கை சூழலும் படம்பிடிக்க, படம் பார்க்க, குளிர்சாதனைவசதி நிறைந்த கூடங்களும் – பல மாநிலத்தில் இருந்தும் கூட தினம் தினம் வந்துச் செல்லும்மக்கள் வெள்ளமும் – இச்சூழலில்தான் நம் திரைக்கலைப் பயில்கிறோம் என்று நெஞ்சுநிறுத்திச் சொல்லும்போதும் நமக்கு ஏற்படும் மகிழ்வையும் குதூகலத்தையும் எப்படி சொல்ல? எப்படி எழுத?

எந்த மாநில அரசும் திரைக்கலை வளர்க்க, இப்படி தன்னிகரற்ற திரைப்பட நகர் தந்ததில்லை என்று அறியும்போது, அதை நமக்கு ஏற்படுத்தித் தந்த அம்மையாரின் திசை நோக்கி வணக்கம் செலுத்துகிறோம்.

எனது அருமை டி.எப்.டி மாணவர்களே நாம் செய்ய வேண்டிய செஞ்சோற்றுக் கடன் ஒன்று உண்டு. இத்தனை வசதிகளையும் பயன்படுத்தி நம் படிப்பு முடிந்தவுடன் கலைத்துறைக்குச் செல்ல இருக்கிறோம். நாம் படைக்கும் படங்கள் எல்லாம் திரைக்காவியங்கள் ஆக வேண்டும். இந்தியத் திரைப்படங்களுக்கு நம்படங்கள் ஓர் உதாரணம் ஆக வேண்டும். உலகத் திரையரங்கில் நாம் பல பரிசுகள் வென்று குவிக்க வேண்டும். அப்படி ஒருச்சாதனை நாம் படைக்கும்போது, நமக்கு திரைப்பட நகர் தந்த அத்தாய் உள்ளம்

*ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனை*
*சான்றோன் எனக் கேட்ட தாய்.*

என்பது போல் திரைப்பட நகர் உருவாக்க அவர்பட்ட சிரமங்கள் எல்லாம் மறந்து அவர்கள் கண்கள் ஆனந்தத்தால் குளம் ஆகும். திரைப்பட நகரின் உண்மை லட்சியம் அன்று தான் வெற்றிப்பெறும். அவர்கள் கடன் முடிந்தது; இனி உன் செஞ்சோற்றுக் கடன்காத்திருக்கிறது.

*சிந்திப்பாய்!*

*உழைத்திருவாய்!*

*வெற்றிப்பெறுவாய்!*

---

☆ நடிகர் திலகம் நடித்த "மனோகரா" என்ற படத்திற்கு முன்பே"மனோகரா" என்ற படம் ஒன்று வெளியானது இதன் கதாநாயகன்நாடகத் தந்தை "பம்மல் சம்மந்த முதலியார்"

*best wishes from*



# SUNDAR SILK CENTRE

&

# SUNDAR READYMADE CENTRE

**KUMARESAN**
**NANGAVALLI**
**THARAMANGALAM**
**SALEM (Dt.)**
**PIN : 636 502**

**Prop : KUMARESAN**



# விடை பெறுகிறேன்

*மணியன் மகன்*

(மூன்றாம் ஆண்டு மாணவனின் பாவ மன்னிப்பு கவிதை)

என் அன்பு கல்லூரியே
எனக்கு விடைகொடு
கோடம்பாக்க, வீதிகளும்
சிங்கிள் டீயும்
எனக்காக காத்திருக்கும்
என் அன்பு கல்லூரியே
விடை கொடு.

வகுப்பறைகளே மன்னியுங்கள்
பல முறை உறங்கி விழுந்திருக்கிறேன்
அவையெல்லாம் படித்து முடித்த
கலைப்பில் தான்..

ஆசிரியர்களே மன்னியுங்கள்
பல புனைபெயர்களில் உங்களை
அழைத்திருக்கிறேன்.
அவையெல்லாம் உங்கள் மேல் உள்ள
உரிமையில் தான்

நூலக புத்தகங்களே மன்னியுங்கள்
உங்களின் பல பக்கங்களை
நான் திருடி இருக்கிறேன்.
அது என் அறிவு பசியை
தீர்த்துக் கொள்ளத்தான்

தோட்டத்து செடிகளே மன்னியுங்கள்
கிள்ளி உங்களை எறிந்திருக்கிறேன்
அது ஏதோ யோசனையில் தான்

கல்லூரி நுழைவாயிலே என்னை மன்னியுங்கள்
பல முறை வாசல் வரை வந்து நுழையாமலேயே
மீண்டும் வீடு திரும்பியிருக்கின்றேன்
அது எதையோ மறந்து விட்ட
காரணத்தால் தான்

என் அன்பு கல்லூரியே
எனக்கு விடைகொடு
கோடம்பாக்க வீதிகளும்
சிங்கிள் டீயும்
எனக்காக காத்திருக்கும்
என் அன்பு கல்லூரியே
விடை கொடு

---

# சுமைதாங்கி

உன் தந்தையை சுமந்தாள்.
கருவாக உன்னை வயிற்றில் சுமந்தாள்.
குழந்தையாய் மார்பில் சுமந்தாள்,
உயிர்பாலூட்டி மடியில் சுமந்தாள்,
உள்ளம் நிரப்பி அன்போடு சுமந்தாள்,
கடமை ஏந்தி குடும்பத்தையே சுமந்தாள்,
இருளை நீக்கும், ஒளியை சுமந்தாள்,
உயிரோடு இன்று, அவள் உலவும் போது
யாதொன்று நீ சுமந்தாய்?....

**P.V. வித்யாஸ்**
இரண்டாம் ஆண்டு படத் தொகுப்பு

# சிந்திக்க சில நொடிகள்

எஸ். ஜனகராஜ்
முன்றாண்டு படப்பதணிருதல்

பிறருடைய பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன் ஆவான்.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும்.

உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.

உண்மைக்கா எதையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் துறக்காதே.

பிறரது குற்றங்களை ஒரு போதும் பேசாதே.
அதைப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை.

காம எண்ணமும் காமச் செயலைப் போவே தீயதாகும்.

ஆசையை அடக்குவதே மிகச் சிறந்த பயனைத் தரும்.

பிறருக் கென்று வாழ்பவர்களே வாழ்பவர்கள்: மற்றவர்கள் நடைபிணத்துக்குச் சமமானவர்கள்.

மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும், குறைந்த அளவு காரியங்களைச் செய்வது மேலானது.

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனே மகாத்மா ஆவான்.
மற்றவர்கள் துராத்மாக்களே.

– சுவாமி விவேகானந்தர்
அவர்களின் பொன்மொழிகள்.

*With Best Wishes from* ☎ 8241003

PIXAL GRAPHICS

Mount Road
Madras

# 100 நூறாவது ஆண்டை நோக்கி ....

*சினிமா....!*

*சினிமா....!*

*சினிமா....!*

ஆம்! நமக்கெல்லாம் ஆச்சரியத்தை விளைவிக்கும் வகையில், கடந்த நூறாண்டுகளில் பிரம்மாண்டமான வளர்ச்சியை அடைந்திருக்கிறது இந்த மூன்றெழுத்து சாதனம். எல்லா தரப்பினரையும் கவர்ந்து, அவர்களது மனதுள் ஆலமரத்து வேர்களைப் போன்று மிக ஆழமாக வேரூன்றியிருக்கின்ற ஒரே மக்கள் தொடர்பு சாதனம் "*சினிமா*".

"அந்த படத்தை பார்த்ததிலிருந்து பொண்டாட்டியை கை நீட்டி அடிக்கிறத நிறுத்திட்டேன்,"

"அந்த படத்தைப் பார்த்தப் பிறகுதான் தைரியமாக எட்டுக் கொலைகளை அடுத்தடுத்து செய்ய முடிந்தது".

இப்படியெல்லாம் சமுதாயம் பேசும்போது, ஒருவனை சீரழிப்பதற்கும், செம்மைப்படுத்துவதற்கும், சினிமாவால் முடியும் என்பதுபுலனாகிறது. அரசியல் தலைவர்கள் கூட சினிமாக்காரர்களைஅருகில் வைத்து கொண்டால் நிச்சயமாய் ஜெயித்து விடலாம் என்று எண்ணப்பட்ட காலம் போய், இன்று சினிமாக்காரர்களே,தொடர்ந்து அரசியல் தலைவர்களாக மாற்றப்படுகின்ற காலம் வந்து விட்டது.

வெள்ளித்திரையிலே மின்னுகின்ற ஒரே தகுதியை அடிப்படையாய் வைத்து இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற பொறுப்பை மக்கள் சினிமாக்காரர்களுக்கு கொடுக்கிறார்களென்றால், சினிமா, அவர்களை எந்த அளவிற்கு தன்பால் கவர்ந்திழுத்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் அசுர வளர்ச்சி நம்மை பிரமிக்க வைத்தாலும், இந்த நிலையை அடைவதற்காக, சினிமா, கடந்து வந்துள்ள கரடு முரடான பாதையை திரும்பிப் பார்த்தோமானால், இதன் வளர்ச்சி படிப்படியாய் தான் ஏற்பட்டிருக்கிறது என்கிற உண்மை புரியும்.

இன்றைய நிலையில் பெரும் பொழுதுபோக்கு அம்சமாகவும், பலதொழிலாளர்களின் வாழ்க்கை ஜீவிக்கவும் காரணமாக இருக்கின்ற இந்த சினிமா, ஆரம்பத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**1894**-ம் ஆண்டு **Kiredoscope** என்ற கருவி அறிவியல் விஞ்ஞானி எடிசனால் கண்டுபிடிக்கப்பட்டது. சாவித்துவாரம் போன்ற அமைப்பின்வழியால், ஒரேயொருவர் மட்டுமே படம் பார்க்கக்கூடிய அளவில், இந்த கருவி வடிவமைக்கப்பட்டிருந்தது. இதில், ஒருநிமிடமே ஓடக்கூடிய, அசையும் படங்கள் காண்பிக்கப்பட்டன. படங்கள் அசைவதே அந்த காலத்தில் பிரமாதமான விஷயமாக இருந்தது.

---

★ தென்னிந்தியாவிலேயே "அனிமேஷன்" முறையை முதன் முதலில்அறிமுகப்படுத்திய படம் "பத்மஜோதி". இயக்குனர் T.R. சுந்தரம்.

இதற்கு பிறகு, பலர் பார்க்க கூடிய அளவிற்கு சினைமாவை உருவாக்கியவர்கள், லூமியர் சகோதரர்கள். 1995–ம் ஆண்டு டிசம்பர் 28–ம் நாள், பாரீஸ் நகர ஓட்டல் ஒன்றில், ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த இந்த சகோதரர்கள், இரயில் ஒன்று வருகின்ற காட்சியையும், ஒரு குழந்தை உணவு உண்ணுகின்ற காட்சியையும் திரையிட்டார்கள். ஒலி கண்டுபிடிக்கப்படாத காலகட்டத்தில் வெளிவந்த ஒரு நிமிட ஊமைப்படங்கள் இவை.

இந்த வளர்ச்சியைத் தொடர்ந்து, 1903–ல் முழு நீளத்திரைப்படமாக, எட்வின் போர்ட்டர் என்பவரால் "இரயில்கொள்ளை" என்ற படம் தயாரிக்கப்பட்டது. எடிட்டிங் என்கிற தொழில் நுட்பம் முதன் முதலாக இந்த படத்தில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த படத்தின் ஒளிப்பதிவாளர் எடிசன். கலையாக உருவெடுக்க ஆரம்பித்த சினிமாவை, மேலும் மெருகூட்டி, கலைச்சின்னமாகவும், கற்பனையின் இருப்பிடமாகவும் மாற்றிய பெருமை G.W. கிரிஃபித், ஐசன்ஸ்டின், புடோவ்சின் போன்ற சினிமா மாமேதைகளையே சாரும்.

1927-ல், "ஜாஸ் சிங்கர்", என்ற முதல் பேசும்படம், "வார்னர் பிரதர்ஸ்" என்ற மிகப்பெரிய நிறுவன பேனரில் வெளியானது. இதுவே "உலகின் முதல் பேசும்படம்" என்ற பெயரினை தட்டிச்சென்றது. அசைகின்ற படங்கள் பேசவும் ஆரம்பித்து விட்டன. பின்னணி இசையும் சேர்ந்து விட்டன. இனி, சந்தோஷத்தையும், ஆக்ரோஷத்தேயும், நகைச்சுவையையும் திரையில் நம் கண்களாலேயே காணலாம். உணரப்பட வேண்டிய உணர்வுகளை, காட்சியாகவே திரையில் காட்டிய போது, தங்களையும் மறந்து, நடிகர்கள் சிரித்த போது இவர்களும் சிரித்தார்கள். நடிகர்கள் அழுத போது இவர்களும் அழுதார்கள். இது சினிமாவுக்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றி.

இந்தியாவைப் பொறுத்த மட்டில், 1913–ல் முதல் ஊமைப்படமாக,"ராஜா அரிச்சந்திரா" என்ற படம் வெளியானது. இதை தயாரித்து வெளியிட்டவர் "தாதா சாகிப் பால்கே" ஆவார். 1931–ல் முதல்பேசும் படமாக, "ஆலம் ஆரா", என்ற இந்திப்படமும், அதைத்தொடர்ந்து அதே ஆண்டில், "காளிதாஸ்" என்ற படமும் வெளியானது.

இதற்கு பிறகு, 1950–க்கு மேல் வண்ணப்படங்கள் வெளிவர ஆரம்பித்து, சினிமாஸ்கோப், சினிராமா, 3–D என்று ஒவ்வொரு வளர்ச்சியாய் அடைந்து, இன்று ஏனைய மக்கள் தொடர்பு சாதனங்களும் சினிமாவை நம்பி வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

விஞ்ஞானிகளின் கைகளில் தவழ்ந்து, இன்று கலைஞர்களின்சி ந்தனைகளால் வளர்ந்து, பல்வேறு வடிவங்களுக்கு தன்னை ஆட்படுத்திக்கொண்டு, கலைத்துறைக்கு சிறந்த முறையிலே தனது சீரிய பங்கை ஆற்றி வருகிறது. அறிவியல் துறையில் மேதாவியான எடிசன், லூமியர் சகோதரர்களை அடையாளங் காட்டியதுபோல், கலைத்துறையிலே சிறந்த நிபுணர்களான, இயக்குனர்களையும், ஒளிப்பதிவாளர்களையும், ஏனைய தொழில்நுட்ப கலைஞர்களையும், திறம் மிக்க நடிகர்களையும் சினிமா உலகுக்கு அடையாளம் காட்டிக் கொண்டேயிருக்கிறது.

சினிமா கலைஞர்களுக்கு தரப்படும் உயர்ந்த விருதான ஆஸ்கார்விருது, வங்க இயக்குனர் "சத்யஜித்ரே" அவர்களுக்கு வழங்கப்பட்டபோது உலகமே, இந்தியாவை வியந்து நோக்கியது. அவரைத் தொடர்ந்து, ஃபிரெஞ்சு நாட்டின் உயர்ந்த விருதான "செவாலியே விருது", கலைத்துறையில் அதுவும்

---

★ **சென்னையில் கட்டப்பட்ட முதல் ஸ்டுடியோ "சீனிவாச சினிடோன்"என்பதாகும். 1–4–1934ல் சென்னை சேத்துப்பட்டில் கட்டப்பட்டது.**

நடிப்புத்துறையில் சிறந்த முறையில் பணியாற்றியதற்காக "நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு" வழங்கப்பட்ட போது இந்த உலகம், இந்திய நாட்டின் கலைத்திறனையும், இங்கு வாழும் அற்புதமானகலைஞர்களையும் இனம் கண்டுகொண்டிருக்கிறது. இந்த முறையில் ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞனையும் உயர்த்தி, சர்வதேச அளவில், அவனது நாட்டையும் மற்ற நாடுகளுக்கு அடையாளம் காட்டி பெருமை சேர்க்கின்ற வல்லமை சினிமாவிற்கு அதிகம் உண்டு.

அப்படிப்பட்ட சினிமாவில் நல்ல விஷயங்களை, யதார்த்தமான நிகழ்வுகளை, பாதிக்கின்ற சம்பவங்களை, பகுத்தறிவுச் சிந்தனைகளை, மயங்கி கிடக்கும் மக்களை விழித்தெழச் செய்கின்ற புரட்சி விதைகளை, வித்திடுவதற்காக பயன்படுத்தினோமென்றால், பொழுது போக்கிற்காக மட்டுமே பயன்பட்டு வரும் இந்த சினிமா, ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையின் போக்கை சீரான பாதையில் மாற்றுவதற்கும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*வாழ்க சினிமா!* *வளர்க அதன் தொண்டு!*



*Best wishes from*



**JOY** DUBBING STUDIO

**JOY** PREVIEW THEATRE

**JOY** RECORDING STUDIO

35mm High Speed Rock 'N' Roll ● Computerised Dubbing ● Audio ● Video ● Multi Track Recording Digital



18, MURUGESA COLONY,
RANGARAJAPURAM,
KODAMBAKKAM,
MADRAS - 600 024.
Ph : 4833859, 420110

**K.J. Joyii**
MUSIC DIRECTOR

# With Best Compliments From




## VGP

## UNIVERSAL BROADCAST LTD.

39 Anna salai Madras 600002
Phone: 8525456, 8525513

JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv JJTv

**TELEVISION TRANSFORMED TO TALENT THEATRE**



# J JAY Tv

**Enchanting Entertainment Exotic**

**Serials of Dominent film personalities**

**Songs - Scenes - Sequences**

**Facinating Shows, Gusto Games**

**Classical Cinemas, Modern Movies**

**Memorable Memories, Sincilatting Sports,**

**Talk Shows etc. etc...**

JJ Tv

**J JAY Tv Pvt. Ltd.**
No. 68, Habibullah Road,
T. Nagar, Madras 600 017.
Ph:8240011, 8240022.
Fax: 8250041.

**J JAY Tv - A Gateway to Glamourous Galaxy**